பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 17 திங்கட்கிழமை 01.05.2023 கதிர் 172

ஐ.எம்.எவ், இந்தியாவின் உதவியுடன்

# தேர்தல் இன்றி 2 வருடங்கள் ஆட்சியை தொடர தீர்மானம்

## முன்னிலை சோலிசக் கட்சி குற்றச்சாட்டு



ஐ.எம்.எப், அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஆட்சியை முன்னெடுப்பதற்கு ரணில் ராஜபக்ஷ ஆட்சி திட்டமிட்டுள்ளதாக முன்னிலை சோலிசக் கட்சியின் பிரதம செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்தார்.

நுகேகொடவில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது மே தினக் கூட்டமானது நுகேகொட ஆனந்தசமரக்கோன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன.

தற்போதைய சூழலில் ரணில் ராஜபக்ஷ ஆட்சியே நடைபெறுகின்றது. இந்த ஆட்சியை தேர்தல்களை நடத்தாது இன்னமும் இரண்டுஆண்டுகளுக்குநீடித்துக் கொண்டு செல்வதே திட்டமாகவுள்ளது.

☞ 3

## இனி இது ரகசியம் அல்ல!

இன்று தொழிலாளர் நாள் என்பதால் உழைப்பாளர்கள் குறித்து ஒரு தகவலைப் பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கின்றேன். இது தொழிலாளர்கள் பற்றிய தகவல்தான் என்றாலும், வடக்கு மாகாண சபையின் நடவடிக்கை தொடர்பான பார்வைதான்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அரச அலுவலகங்களில் கடமையாற்றிய பலரும்கூட அதில் போட்டியிடுவதில் ஆர்வமாக இருந்தனர். வேட்புமனுவையும் தாக்கல் செய்தனர். நாட்டில் மொத்தமுள்ள 8 ஆயிரம் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான போட்டியில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் அரச அலுவலர்கள். வெற்றி பெற்றால் அவர்களுக்கு அரச சம்பளமும்,

☞ 2

# இந்திய விமானப்படை தளபதி இங்கு வருகை

இந்திய விமானப்படைத் தளபதி எயா சீப் மார்ல் விவேக் ராம் சௌத்ரி 5 நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்றைதினம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை விமானப்படை தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விமானப்படை தளபதி எயா மார்ல் சுதர்ன பத்திரணவின் அழைப்புக்கமைய, இந்திய விமானப்படைத் தளபதி எயா சீப் மார்ல் விவேக் ராம் சௌத்ரி உள்ளிட்ட நால்வர் அடங்கிய தூதுக்குழு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நாளை நாட்டுக்கு வரவுள்ளது.

1982இல் போர் விமானத்தின் விமானியாக இந்திய விமானப்படையில் இணைந்த அவர், பல்வேறு வகைப்பட்ட போர் விமானங்களில் 3800 மணித்தியாலங்கள் பயணித்த அனுபவம் உடையவர் ஆவார்.

விமானிகளுக்கான பயிற்றுவிப்பாளராகவும், விமானிகளுக்கான உபகரணங்களுக்கான மதிப்பீட்டாளராகவும் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்த அவர் 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் 30ஆம் திகதி இந்திய விமானப்படையின் 27ஆவது தளபதியாக

☞ 3

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

## இன்னும் முழுமையான மதிப்பீடு இல்லை

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்படுத்தப்பட்ட பேரிடருக்கு எவ்வளவு நட்டஈடு கேட்பது என்பது தொடர்பிலான இன்னமும் முழுமையான அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் சந்திப்பொன்றை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் கோரியுள்ளதாகவும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்படுத்தப்பட்ட பேரிடர் தொடர்பில் முழுமையான அறிக்கையைக் கோரியுள்ளது. எனினும் அந்தக் கோரிக்கை தொடர்பில் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. ஆகவே தான், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தினைக் கேரியுள்ளோம் - என்றார்.

முன்னதாக, கடந்தவாரம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்படுத்தப்பட்ட பேரிடர் தொடர்பில் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சிங்கப்பூரில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணையின் போது இழப்பீட்டுத்தொகை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டியுள்ள நிலையிலேயே கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிடத்தில் முழுமையான அறிக்கை இப்போது தான் கோரப்பட்டுள்ளது.

# இழப்பீட்டைக் குறைத்து பெறுவதற்கு முயற்சியா?

## கேள்வி எழுப்புகிறது தேசிய மக்கள் சக்தி

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களுக்காக குறைந்தளவு இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காகத் தானா அது தொடர்பான வழக்கு சிங்கப்பூரில் தாக்கல் செய்யப்பட்டது என்று தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது..

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர்

☞ 3

# எரிபொருள்களின் விலை குறைப்பு

எரிபொருட்களின் விலைகள் நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோல் 7 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலை 333 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக ஒரு லீற்றர் பெற்றோல் 10 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலை 365 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலையை 15 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன் அதன் புதிய விலை 310 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 135 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன் அதன் புதிய விலை 330 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# எமது மக்கள் வெள்ளத்தை தடுத்து நிறுத்த முடியாது

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் வெள்ளத்தை தடுத்து நிறுத்த முடியாது என்பதை எமது மே தினக் கூட்டம் ஜனாதிபதி ரணிலுக்கு அறிவிக்கும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பு விகாரமஹா தேவி பூங்காவில் நடைபெறவுள்ள நிலையில் அதன் ஏற்பாட்டுப் பணிகளை அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க பார்வையிட்டபின்னர்

☞ 3

ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் வைத்த

# ரணிலினின் செயலால்தான் தேவையற்ற பிரச்சினைகள்

## இப்படிச் சொல்கிறார் மைத்திரி



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு சென்றுள்ளதால்தான் தேவையற்ற விவாதங்கள் எழுந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் ஞாயிற்றுக்கிழமை கண்டிக்கு சென்றதோடு மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய நிலைப்பாடும், சாவதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்று நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்பதுதான். ஆனால் தற்போது நிலைமைகள் குழப்பமடைந்துள்ளன.

என்னுடைய காலத்திலும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் பெறப்பட்டன. ஆனால் எம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய உடன்பாடுகளிலேயே இணங்கினோம்.

தற்போது அவ்விதமான நிலைமைகள் இல்லை. உடன்பாட்டை நாடாளுமன்றத்தில்

☞ 3

# பொருளாதார மீட்பு ஒன்றே ரணிலின் குறிக்கோளாம்



யார் எதைச் சொன்னாலும், நாட்டில் வரிசை யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக செயற்பட்டுக்கொண்டிருப்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்று அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டை யாரும் இலகுவாக மறந்திருக்க மாட்டார்கள். புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறவில்லை. போயா தின வழிபாடுகள் நடைபெறவில்லை. ஏனென்றால் மக்கள் அனைவரும் எரிபொருளுக்கும், எரிவாயுவுக்கும் நீண்ட வரிசைகளில் வீதிகளில் காத்திருந்தார்கள்.

அவ்வாறான நெருக்கடியான நிலைமையை தற்போது முற்றுப்புள்ளி வைத்து மீண்டும் அவ்விதமான நிலைமை உருவாகாது இருப்பதற்காக பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பணிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

எதிர்கட்சிகள் அரசியல் இலாபமீட்டுவதற்காக எவ்விதமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கமுடியும். ஆனால் நாட்டின் எதிர்காலத்திற்காகவே ஜனாதிபதி பதவியை ஏற்று அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதை மக்கள் புரிந்துள்ளார்கள் - என்றார்.

# 50 ஆயிரம் பேருடன் மே தினம்

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் 50 ஆயிரம் பேர் கலந்துகொள்வார்கள் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

வேலைத்தளத்தில் போராட்டம் - தாய் நாட்டின் வெற்றிக்காக எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக் கள் சக்தியின் மே தினக் கூட்டம் மாளிகாவத்தை ஈ.ஏ. குணசிங்க மைதானத்தில் நடைபெறவுள்ள நிலையில் அதன் ஆயத்தப் பணிகளைப் பார்வையிட்ட கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு பி.டி.ஜெயசிங்க மைதானத்தில் இருந்து மேதினப் பேரணி தொடங்கி குணசிங்க மைதானத் தில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்கின்றோம். அத்துடன், தொழிற்சங்கங்கள், துறைசார் நிபுணர்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்கின்றோம் - என்றார்.

# வடக்கு கிழக்கில் மீண்டுமொரு மோதல் உருவாகும் சாத்தியம்

## ஐ.நா. பிரதிநிதிகளிடம் காரணத்தைக் கூறினார் சுமந்திரன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, தொல்பொருள் வளச்சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் இலங்கையில் மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கியநாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

இத்தகைய முறையற்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை ஆளும் தரப்பிடம் வலியுறுத்தும்படியும் அவர் ஐ.நா. அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்ஸலா ஆகியோருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதை இலக்காகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையால்

☞ 3

# மகிந்தவைப் பிரதமராக்கும் தீர்மானம் இன்று இல்லை

## முஜிபுரின் கருத்துக்கு பெரமுன மறுப்பு

மே தினக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் முன்வைக்ப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்தகமகே தெரிவித்தார்.

சவால்களை முடியடித்து அபிலாஷைகளை வெற்றிகொள்வோம் என்ற தொனிப்பொருளில் பொரளை கெம்பல் மைதானத்தில் இன்றைய தினம் பொதுஜனபெரமுனவின் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் அதன் ஏற்பாட்டு பணிகளை பார்வையிட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 3

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People


காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறிமலை ஆலயத்துக்கு சுமந்திரன் எம்.பி. குழு நேற்று பயணம்









வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்திற்குத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்குமாகாணசபைஅவைத் தலைவர்சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான குழுவினர் ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு ஆதி சிவன் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சைவ விக்கிரகங்கள் அடித்து நொருக்கப்பட்டு துடைத்தழிக்கப்பட்டிருந்தன. அவற்றை அவை இருந்த இடங்களில் அவ்வாறே மீள பிரதிஸ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் வியாழக்கிழமை கட்டளை வழங்கியிருந்தது.

இதனையடுத்து வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு திருக்குடமுழுக்கும் இடம்பெற்றிருந்தது.

இந்த வழக்கில் ஆலயம் சார்பிலும், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சார்பிலும் மன்றில் முன்னிலையாகி வாதாடியவர் நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இந்நிலையில், விக்கிரங்கள் வைப்புச் செய்யப்பட்டமை மற்றும் ஆலயத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் பார்வையிடுவதற்காகஅவரும்அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் ஆலய நிர்வாகிகள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

ஆலயம் தொடர்பான வழக்கில் முன்னிலையாகிய வவுனியாசட்டத்தரணிகளான தி.திருஅருள், திலீப் காந்தன், கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினரும் இவர்களுடன் ஆலயத்திற்குவருகை தந்திருந்தனர். (100)

# நல்லதோர் எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் தொழிலாளர்கள்

## மே தின வாழ்த்துச் செய்தியில் தமிழ்த் தேசியக் கட்சி தெரிவிப்பு

கால் நூற்றாண்டு காலப் போரினால் பேரழிவைச் சந்தித்த வடகிழக்கு மாநிலத்தின் தமிழ்பேசும்விவசாயிகள்மற்றும் கடற்றொழிலாளர்களும் இந்த மே தினத்தில் நல்லதோர் எதிர்காலம் பற்றிய கனவுகளை தாங்கிய வண்ணம் வாழ்க்கைப் போராட்டத்தில்துணிந்துநிற்கின்றனர்.

இவ்வாறுதமிழ்த்தேசியக் கட்சியின் மே தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் செயலாளர் ந.சிறீகாந்தா விடுத்துள்ள இந்தச் செய்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகத் தொழிலாளர்களின் எழுச்சி நாளான மே தினத்தில் இலங்கைத் தமிழ் இனத்தின் தொழிலாளர் வர்க்கமும்இணைந்துநிற்பது இயற்கையானது.

இலங்கைத்தீவில் மிக இறுக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆட்சிக் கட்டமைப்பு என்பது தமது உடல் உழைப்பை மட்டுமே நம்பி வாழும் தொழிலாளர்களின் நலன்களை புறக்கணித்து , ஓர் சுரண்டல் பொருளாதார அமைப்பினை தொடர்ந்து பேணிவரும் ஒன்றாகவே நிலைபெற்று நிற்கின்றது.

இந்த அரசியல் பொருளாதாரச் சூழலில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள்தமிழ்த்தொழிலாளர்களே! அதுவும் கடந்த 200 ஆண்டுகளாக இலங்கைத் தீவின் பொருளாதாரத்திற்கு உந்து சக்தியாக விளங்கிவரும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள், தமது அடிப்படை உரிமைகளான உழைப்புக்கு ஏற்ற ஊதியம்,

சுகாதாரத்தோடு கூடிய குடியிருப்புக்கள் மற்றும் கல்விக்கான சமவாய்ப்புக்கள் என்பன தொடர்ந்து மறுக்கப்படும் நிலையிலேயே துன்பத்தில் வாழ்கின்றனர்.

இதற்கான முழுமுதற் காரணம் 1948இல் இலங்கைத் தீவில் இருந்து ஆங்கில ஏகாதிபத்திகள் வெளியேறிய ஒருசில மாதங்களுக்குள்ளேயே, புதிய சிங்கள ஆட்சியாளர்களால் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை மற்றும் வாக்குரிமை என்பன அன்றைய நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்த சில வடகிழக்கு தமிழ் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு, பறித்தெடுக்கப்பட்ட இனவெறிநடவடிக்கையாகும்.

இதற்கு பிறகு, சுமார் 16 ஆண்டுகள் கழித்து, 1964 இல் இந்த மக்களில் சுமார் அறுபது வீதமானவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் வழிவகுத்தது.

இந்த இலங்கை இந்திய ஒப்பந்தம், அன்றிருந்த இரு நாட்டு ஆட்சிகளும் எமது மக்களுக்கு கூட்டாக இழைத்த பெரும் கொடுமையாகும். இருந்தும், இந்த நாட்டில் எஞ்சி இருக்கும் மலையக தமிழ் மக்கள் இப்பொழுது எழுச்சி பெற தொடங்கியுள்ளனர்.



கால் நூற்றாண்டு காலப் போரினால் பேரழிவைச் சந்தித்த வடகிழக்கு மாநிலத்தின் தமிழ் பேசும் விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களும் இந்த மே தினத்தில் நல்லதோர் எதிர்காலம் பற்றிய கனவுகளை தாங்கிய வண்ணம் வாழ்க்கைப் போராட்டத்தில் துணிந்து நிற்கின்றனர்.

இலங்கை தீவில் மே தினம் தொடர்பில் முதலுரிமை கொண்ட தொழிலாளர் கூட்டமாக இந்த மக்களே உள்ளனர் . இவர்களை போன்றே, தென்னிலங்கையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் சிங்கள தொழிலாளர்களுக்கும் இந்த மே தினம் உரியதாகும். அனைவருக்கும் எமது மே தின வாழ்த்துக்களை நாம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம் - என்றுள்ளது.




# உழைப்பவர் உயர்வை உரைத்திடும் தினம்!

உழைத்துமே உயர்ந்திடு வோமே
உதிரமே உழைப்பவர் பலமே
உலகமே ஏத்திடு தினமே
உயர்வுடை மே தினமே

உண்ணும் உணவும் உழைப்பே
ஓடும் காரும் உழைப்பே
விண்ணில் பறக்கும் யாவும்
எண்ணி லடங்கா உழைப்பே

விருந்தும் மருந்தும் உழைப்பே
விளக்கின் வரவும் உழைப்பே
அருந்தும் அனைத்தும் உழைப்பே
அனைவரும் மதிப்போம் உழைப்பை

வானுயர் கட்டடங்கள் உழைப்பே
வான்வெளிப் பயணங்கள் உழைப்பே
நீள்கடல் ஆராய்ச்சி உழைப்பே
நிம்மதி தருவதும் உழைப்பே

முத்தினை எடுப்பதும் உழைப்பே
முடியினில் வைப்பதும் உழைப்பே
சொத்தினைக் குவிப்பதும் உழைப்பே
சுகத்தினைக் கொடுப்பதும் உழைப்பே

ஆடைகள் அனைத்தும் உழைப்பே
ஆலைகள் பெருக்கம் உழைப்பே
வீடுகள் அனைத்தும் உழைப்பே
வீதிகள் பெருக்கம் உழைப்பே

உழைத்திடும் கரங்கள் ஓங்கிட வேண்டும்
உழைத்திடும் வர்க்கம் விழித்தெழ வேண்டும்
உழைப்பவர் உரிமை காத்திட வேண்டும்
உழைப்பவர் தினத்தைப் போற்றிடல் உயர்வே

முதலாளி சிறக்கத் தொழிலாளி உழைப்பார்
தொழிலாளி சிறக்க வழியெதும் உண்டா
முதலாளி நினைத்தால் தொழிலாளி சிரிப்பார்
தொழிலாளி முதலாளி தோழமை வேண்டும்

மேதினம் என்பது விழித்தெழு தினமே
மேதினம் என்பது வியர்வையின் தினமே
உழைப்பவர் உயர்வை உரைத்திடும் தினமே
உரத்துரைப் போமே உழைப்பவர் நலமே

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மே 4 நடக்கும்

(ந.லோகதயாளன்)

யழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மே 4 வியாழக்கிழமை ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன. தியாகராஜா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தலைமையில் இடம்பெறும் என மாவட்டச் செயலாளரும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான சிவபாதசுந்தரன் அறிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் காலை 9 மணிக்குத் தொடங்கும் இக் கூட்டத்தில்

புதிய கிராமம் புதிய நாடு தொடர்பில் ஆராய்தலுடன் திட்ட முன்னேற்றம் மற்றும் திட்ட அனுமதிகள், மாகாண ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் பணிகள. உள்ளிட்டவை ஆராய்வதாகவே நிகழ்ச்சி நிரலிடப்பட்டுள்ளது.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைக் கூட்டங்களுக்குச் செல்வதற்கான அனுமதிக்கப்பட் விடுப்பும், உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான கொடுப்பனவும் கிடைக்கும். எனவே அரச பணியில் இருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல பக்க உழைப்புத்தான் என்பதால் பலருக்கும் ஆர்வம் பீரிடுவது வழமை.

அந்த ஆர்வம் எந்தளவிற்கு என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன் பாருங்கள். என்னுடைய தொகுதியில் கடந்த முறை இப்படி ஓர் அரச அலுவலர் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட விரும்பி தமிழ் அரசுக் கட்சியை நாடினார். நல்லூரில் வேட்பாளர் தெரிவிற்குப் பொறுப்பாக இருந்தவரான சி.வி.கே.சிவஞானத்தைப் போய்ப்பார்த்திருக்கிறார் அவர். அவரும் இந்த அலுவலரை நல்லபடி வரவேற்று உபசரித்து அவரது கோரிக்கை யைக் கேட்டபின்னர், இப்போது தானே கட்சிக்கு வந்திருக்கிறீர்கள், வந்த உடனேயே வேட்பாளர் ஆகவேண்டும் என்றால் அது முறையாக இருக்காது. கட்சியில் ஒரு நாலு வருடம் சேவை செய்யுங்கள் அடுத்த தேர்தலில் வாய்ப்புத் தருகின்றேன் என்று சொல்லியிருக்கிறார்.

அவரது பதிலைக்கேட்ட அந்த அலுவலர் அப்படியே அங்கிருந்து எழுந்து நேராகச் சென்றது தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திற்கு. அங்கே வேட்பாளர்களைத் தேடிப் பிடித்துக்கொண்டிருந்திருப்பார்கள் போலும் இவர் போய்க் கேட்டதும் இவரது பெயரையும் பட்டியலில் சேர்த்து வேட்பாளராக்கிவிட்டார்கள். துன்பம் என்னவென்றால் அவர் தேர்தலில் வெற்றியும் பெற்றுவிட்டார். வாக்குக் கேட்டு வந்தபோது அந்த அரச அலுவலரே தான் இந்தக் கதையை எனக்குச் சொன்னார், அத்தோடு இன்னொன்றையும் சொன்னார், சிவஞானத்தார் சொன்னபடி 4 வருசம் காத்திருக்க எனக்கென்ன வேற வேலை இல்லையே! அது சரிதான் அவருக்குத்தான் வேற வேலை இருக்கே. பிறகெதற்கு அவர் காத்திருக்க வேண்டும். இதில இன்னும் வேடிக்கை என்னவென்றால் இந்தத் தடவை அவர் ஜனநாயகக் கூட்டணியின் அதுதான் குத்துவிளக்கு வேட்பாளர். போன தடவை இதே அணியில இருக்கிற ரெலோ சார்பில கூட்டமைப்பு நிறுத்தின வேட்பாளருக்கு எதிராகத்தான் கூட்டணியில நின்று அவர் வென்றவர். இப்ப அதே ரெலோ இருக்கிற கூட்டணியிலதான் அவர் வேட்பாளர்.

இதில் துன்பம் என்னவென்றால், அந்த வேட்பாளர் தனது சாதி வாக்குகளை வைத்து அங்கு வென்றும் விட்டார். பின்னாளில் அந்த நன்றிக்கடனையும் அவர் நன்றாகவே ஆற்றினார் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரியவேண்டும் என்பதில்லை. அது சரி அரசியல்வாதி என்று வந்திட்டாலே கொள்கையென்ன கோட்பாடென்ன, எப்படியாவது வெல்லவேண்டும் அவ்வளவுதானே!

நான் சொல்ல வந்தது அந்த அரச அலுவலரின் கதையை அல்ல, இப்படி அரச அலுவலர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதில் கடும்ஆர்வமாகஇருக்கப்போக இந்தத் தடவையும் வேட்புமனுத் தாக்கலில் வடக்கிலும் பலரும் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்தனர். அவர்களின் போதாத காலமோ அல்லது ரணிலின் போதாத காலமோ தேர்தல் நடக்கவில்லை.

வேட்புமனுத் தாக்கல் செய்ததில் இருந்து அரச அலுவலர்களான வேட்பாளர் கள் தங்கள் கடமைக்குச் செல்ல முடியாது, சம்பளமற்ற விடுப்புப் பெறவேண்டும் என்பது சட்ட ஏற்பாடு. அதற்கேற்ப வேட்பாளர்களான அரச அலுவலர்கள் எல்லோரும் சம்பளமற்ற விடுப்பு எடுத்துவிட்டார்கள். ஆனால் தேர்தல் பிற்போடப்பட்டு விட்டது. இனி எப்போது நடக்கும் என்று ஆண்டவனுக்கும் தெரியுமோ தெரியாது. அப்படிபட்ட நிலையில் இவர்களுக்கு சம்பளம் இல்லையே என்று அரசியல்வாதிகள் கவலைப்படப்போக, அடிப்படைச் சம்பளத்தை மட்டும் அவர்களுக்கு வழங்கும்படி தேர்தல்கள் திணைக்களம் ஒரு பரிந்துரையைச் செய்தது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையில், தேர்தல் இனி எப்போது நடக்கும் என்று தெரியாத நிலையில் இந்த அரச ஊழியர்களை மீண்டும் பணிக்கு அழைப்பதா இல்லையா என்று கொழும்பு ஆராய்ந்து வருகின்றது. ஆனால் முடிவெடுக்கவில்லை. இந்த நிலையில்தான் வடக்கு மாகாண சபை, இங்குள்ள வேட்பாளர்களான அரச அலுவலர்கள் எல்லோரையும் தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறது. அதன்படி பலரு தமது கடமைகளை மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் வாக்களிப்பு இடம்பெறவில்லையாயின் அரச ஊழியர்கள் தமது கடமைக்குத் திரும்பலாம் என்றவாறாக இருக்கக்கூடிய சட்டநுணுக்கத்தைக்கொண்டு வடக்கு மாகாண சபை இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் கொழும்பில் பிரதமோ இது தொடர்பில் இனி தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி அதன் பின்னரே ஒரு கொள்கை முடிவு எடுத்து வேட்பாளர்களான அரச அலுவலர்களை மீண்டும் வேலைக்கு எடுப்பதா இல்லையா என்று முடிவெடுக்க முடியும் என்கிறார்.

வடக்கு மாகாண சபைக்கு அதெல்லாம் ஒரு பொருட்டேயில்லை. பிரதமர் கிடக்கிறார், அவர் பாட்டுக்கு அவர் வேலையைப் பார்க்கட்டும், எங்களுக்குத் தெரியாத சட்டமா என்ற ரீதியில் வடக்கு மாகாண சபை நடவடிக்கையில் தடாலடியாக இறங்கிவிட்டது. என்ன இருந்தாலும், வேறு எதில் இல்லாவிட்டாலும் இதிலாவது வடக்கு மாகாண சபை இலங்கையில் ஓர் அங்கம் அல்ல அது தனிநாடுதான் என்றுவகையில் மாகாண அதிகாரிகள் எடுத்திருக்கக்கூடிய

(03ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நடவடிக்கை புல்லரிக்க வைத்துள்ளது. இந்தத் துணிபு எல்லா விடயங்களிலும் இருந்திருந்தால் நிர்வாக ரீதியாக வடக்கு எப்போதோ தனி நாடாகியிருக்கும் என்பதுதான் என்னுடைய நினைப்பு.

அதுமட்டுமில்லை, அண்மையில வடக்கு மாகாண ஆளுநர் மாகண சபையின் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்திந்து அரசமைப்பின் 13ஆவது திருத்தம்பற்றிஆலோசனைன கலந்தவரெல்லோ, அதில் மாகாண சபை முன்னாள் கல்விஅமைச்சர்சர்வேஸ்வரனும் கலந்துகொண்டிருந்தவரெல்லோ அந்தச் சந்திப்பில இது பற்றியும் ஆலோசிச்சிருப்பினம் என்று ஒரு ஊகம். ஏனென்றால் அதற்குப் பிறகுதான் அரச அலுவலர்களான வேட்பாளர்களைக் கடமைக்குத் திரும்பச் சொல்லி கடிதங்கள் அனுப்பப் பட்டிருக்கு.

பாவம் ஆளுநர் போற காலத்தில என்ன சிக்கலில மாட்டுப்படப்பேறாரோ!

- இடிமின்னல் -

## தேர்தல் இன்றி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச நாணய நிதியம், அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றின் கூட்டு உதவியுடன் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஜனநாயகத்தை மீறிய ஆட்சியை தோற்கடிக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

ஆகவே, சர்வதேச நாணய நிதியம், அமெரிக்க, இந்திய கூட்டு உதவிகளைப் பயன்படுத்தி ரணில் ராஜபக்ஷ ஆட்சி தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கும் திட்டத்தினை தோற்கடிக்க வேண்டும். அதுவே மேதினத்தின் தொனிப் பொருளாகவும், அடுத்துவரும் காலச் செயற்பாட்டுக்கான நோக்கமாகவும் இருக்க வேண்டும் - என்றார்.

## இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவியேற்றார்.

இந்தப்பயணத்தின்போது பிரதானமாக பிராந்திய விமானப்படைகளுக்கிடையில் ஒத்துழைப்பினை மேம்படுத்தல், கூட்டு பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப அனுபவப்பகிர்வுகள், சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்தோடு, இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளார். மே மாதம் 6ஆம் திகதி அவர் நாட்டிலிருந்து செல்லவுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இழப்பீட்டைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பின்போதே அந்த அமைப்பு இதனைத் தெரிவித்தது. அமைப்பின் அங்கத்தவரான சட்டத்தரணி, ஜே.எம்.ஜே.பண்டார இது தொடர்பில் தெரிவித்ததாவது:

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்படுத்தப்பட்ட பேரிடர் இலங்கைக் கடற்பரப்புக்குள்ளேயே இடம்பெற்றது. அக்கப்பலின் எண்ணெய்கசிவு, தீயினால் ஏற்பட்ட சேதங்கள் என்று அனைத்துப்பிரச்சினைகளும் இலங்கையின் கடற்பரப்புக்குள்ளேயே நிகழ்ந்தன. இத னால் ஏற்பட்ட பாதிப்பானது, இலங்கை கடல் வளங்களுக்கும் இலங்கைமக்களும் ஏற்பட்டதாகும்.

அதேநேரம், கடற்றொழிலாளர்களும், எதிர்கால சந்ததியினரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இலங்கைக் கடற்பரப்புக்குள் என்றாலும், வெளியில் என்றாலும், இலங்கையின் நீதிமன்ற அதிகாரத்தினை இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்த முடியும். அதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

அது தொடர்பில் குழப்பம் காணப்பட்டிருந்தால் ஜனாதிபதிகள் சட்டத்தரணிகளையோ அல்லது ஏனைய சிரேஷ்ட சட்டத்தரணிகளையோ கூட்டி தெளிவானதீர்மானமொன்றை எடுத்திருக்கலாம். ஆனால், அதையெல்லாம் தவிர்த்து சிங்கப்பூரில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அதே வேளை. நிபுணர்களின் அறிக்கையின் பிரகாரம் 6.2 முதல் 6.5பில்லியன் டொலர்கள் வரையிலான இழப்பீடு கணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சிங்கப்பூரில் வழக்குத்தொடுத்து அங்கு இழப்பீட்டு விடயத்தினை தீர்த்துக்கொண்டால் 27மில்லியன் டொலர்கள்தான் கிடைக்கும் என்றும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன - என்றார்.

## எமது மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியாளர்களிடம்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் தற்போது மிகவும் நெருக்கடியானதொரு கட்டத்தில் உள்ளோம். இந்த நிலைமையில் நாட்டில் அதிகளவான மக்கள் பங்கேற்ற மே தினக் கூட்டமாக தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் காலிமுகத்திடலில் வரலாறு படைத்திருக்கும்.

துரதிஷ்டவசமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை திட்டமிட்டுத் தடுத்துள்ளார். எமக்கு விகாரமஹாதேவி பூங்கவே அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் திரளால் நிறைந்து கொழும்பின் அனைத்து வீதிகளிலும் பொதுமக்கள் திரள் காணப்படப்போகின்றது.

ஜனாதிபதி ரணிலின் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்பதை எமது மே தினக் கூட்டம் பறைசாற்றும் - என்றார்.

## ரணிலினின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விவாதிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்திருந்தார். இதனால்தான் வீணான குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் அதியுச்ச ஜனநாயகத்தினை வெளிப்படுத்துவதற்காக இவ்விதமாக செயற்பட்டிருக்கலாம். ஆனால், குறித்த செயற்பாட்டால் வெவ்வேறு கருத்துக்கள் தோன்றியுள்ளன.

என்னுடைய காலத்தில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று உடன்பாட்டின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நான் நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பிக்கச் சென்றிருக்கவில்லை - என்றார்.

## வடக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்பட்டுவரும் மோதல் தடுப்புச் செயற்திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் சமாதானத்தைநிலைநாட்டுவதற்கான செயற்திட்டங்கள் முன் னர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டன? இனிவருங்காலங்களில் அவற்றை எவ்வாறு முன்னெடுக்கலாம்? என்பது குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது இலங்கையில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக்கொண்டிருக்கும் இருவிதமான மோதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்த எம்.ஏ. சுமந்திரன், அவற்றை உரியவாறு கையாள்வதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

முதலாவதாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு, மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம்-வாய்ந்த பகுதிகள் அழிக்கப்படல்என்பனபற்றிஐ.நா.அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார் சுமந்திரன், இவை தொடரும் பட்சத்தில் மீண்டுமொரு மோதல்உருவாகக்கூடியசாத்தியப்பாடு காணப்படுவதாகத் தெரிவித்தார். எனவே இது தொடர்பாக ஐ.நா. அதிகாரிகள் ஆளும் தரப்புடன் பேச்சு நடத்தவேண்டும் என்றும், மேற்குறிப்பிட்டவாறான முறையற்றசெயற்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டும்என்றும்சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவதாக நாடு முழுவதும் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் மோதல் குறித்துத் தெரிவித்த அவர், 'அரகலய' உள்ளடங்கலாகக் கடந்தகாலங்களில்மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் இன்னமும் அடையப்படாமை இதற்குக் காரணமாக அமையக்கூடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் அதனூடாகப் பல்வேறு நன்மைகள் அடையப்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க் கும் உண்மையான மறுசீரமைப்புக்களைமேற்கொள்வதற்கும் நேர்மறையானமாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவசியமான அழுத்தத்தை ஆட்சியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் எம்.ஏ.சுமந்திரன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

## மகிந்தவைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொது ஜன பெரமுனவின் பெருந்தலைவராக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் எந்தவொரு தீர்மானத்தினையும் நாளைய (இன்றைய) மே தினக்கூட்டத்தில் கொண்டு வரப்போவதில்லை.

நாடு சுவாசிக்க முடியாதவொரு நிலையில் இருந்தபோது, ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவே தலைமையேற்று அந்த நிலைமையை மாற்றியமைத்து வருகின்றார். அந்த வகையில் விரைவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேநேரம், பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்க மாட்டார். அவருடைய வாழ்த்துச் செய்தி கிடைக்கும்.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்திற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதை நான் அறியவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் எமது உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் - என்றார்.

முன்னதாக, மே தினக் கூட்டத்தில் மகிந்தவைப் பிரதமராக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற பொது ஜன பெரமுன திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை வேட்பாளர் முஜிபுர் ரஹமான் தெரிவித்தார்.

தொலைபேசி இலக்கம்
076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இனியாவது விடியட்டும் தொழிலாளர்களுக்கு

இன்று வைகாசி முதல் நாள். உலகத் தொழிலாளர்கள் நாள். உலகம் முழுவதும் தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்காகக் கொண்டாடப்படும் நாள். வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 8 மணி நேரமாக வரையறுத்துத் தந்த நாள். உழைப்பாளிகளையும் மந்தைகளாக அன்றி மனிதர்களாக மதிக்க இந்த உலகுக்குக் கற்றுத் தந்த நாள்.

உலகம் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மிகக் கொடூரமானதாக இருந்தது. 12 மணி முதல் 18 மணி நேரம் வரையில் தொழிலாளிகள் உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். 15 மணி நேர உழைப்பு என்பது அப்போதெல்லாம் சாதாரணமாக இருந்தது. ஒரு கட்டத்தில் இந்தச் சித்திரவதையைத் தாங்க முடியாத தொழிலாளர்கள் ஆங்காங்கே கிளர்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஆஸ்திரேலியா என்று அவர்களின் கிளர்ச்சிகள், போராட்டங்கள் தொடர்ந்தன. ஆனால் அவை எல்லாமே முதலாளிகளால் வெற்றி கொள்ளப்பட்டன.

1856இல் ஆஸ்திரேலியாவில்தான் முதன்முதலில் 8 மணி நேரம் மட்டுமே வேலை என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டது. அமெரிக்காவிலும் நீண்ட காலமாகத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். 1832, 1835, 1877 ஆகிய ஆண்டுகளில் பெரும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்கள் கேட்டதெல்லாம் 10 மணி நேர வேலை மட்டுமே. ஆனால் அந்தப் போராட்டங்கள் வெற்றி பெற்றதில்லை. கடைசியில் 1886 போராட்டம்தான் உலகத் தொழிலாளர்களுக்கு ஒரு விடிவைக் கொண்டுவந்தது.

அமெரிக்காவில் 1886 வைகாசி 3 அன்று நடந்த போராட்டத்தில் காவல்துறையினர் தொழிலாளர்களைச் சுட்டதில் 4 பேர் உயிரிழந்தனர். அதைக் கண்டித்து மறுநாளே ஒரு போராட்டம் நடந்தது. அதிலும் வன்முறைகள் இடம்பெற, அதற்குக் காரணமானவர்கள் என்று கூறி தொழிற்சங்கத் தலைவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதில் அமெரிக்க நீதிமன்றம் 7 பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்தது. இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியாகவே வைகாசி முதலன் நாளை தொழிலாளளர் தினமாக உலகம் இன்று கொண்டாடி வருகின்றது.

அன்றிலிருந்து தொழிலாளர்களின் உரிமைகள், சம்பளங்கள் தொடர்பில் உலகம் முழுவதும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இன்று வீட்டிலிருந்து வேலை., வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை என்று பல்வேறு முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளபோதும், உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள் முழுமையாக மதிக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. அதுவும் இலங்கை போன்ற நாடுகளில் தனியார் தொழிற்துறையில் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதும் அவர்கள் துன்புறுத்தப்படுவதும் மிக அதிகமாகவே இருக்கின்றது.

பல தனியார் நிறுவனங்கள் இன்னும் தொழிலாளர் உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றன. அவற்றைக் கண்காணித்து சீர்ப்படுத்தவேண்டிய அரச நிறுவனங்களோ அது தொடர்பில் கண்டும் காணாத வகையிலான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுவருகின்றன. வேலை நேரம் 8 மணி என்கிறபோதும், மேலதிக ஊதியம் இன்றி அதிகநேரம் உழைக்கத் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். அதேநேரம் அவர்களில் பலருக்கும் அரசு நிர்ணயித்துள்ள ஆகக்குறைந்த சம்பளத்திற்கும் குறைவாகவே வழங்கப்படுகின்றன. குறிப்பாகக் கடைகள், உணவகங்கள், சிறுகைத்தொழில் துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் நிலை இன்றும் மோசமாகவே இருக்கின்றது.

மேல் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கு இருக்கும் பலமான தொழிற்சங்கங்களைப்போன்று ஏழைத் தொழிலாளர்களுக்காகக் குரல்கொடுக்க பலம்மிக்க தொழிற்சங்கங்கள் இல்லாத நிலையில் அவர்களின் அழுகுரல் வெளியே கேட்காத நிலையே தொடர்கின்றனது.

இந்தத் தொழிலாளர் தினத்திலிருந்தாவது இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். அதற்கான முயற்சிகளில் அரசும் தொழிற்றுறையும் அக்கறையோடு ஈடுபடவேண்டும்.

வெடுக்குநாறி மலைக்கு

# பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்லவேண்டும்

## நீதிமன்ற கட்டளை அதுவே என்கிறார் சுமந்திரன்









நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்லவேண்டும் அதனை மதித்து அரச உத்தியோகத்தர்கள் செயற்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி மலைக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயம் செய்த அவர் ஆதி இலிங்கேஸ்வரர்ஆலயத்தைப் பார்வையிட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போதுகருத்துவெளியிட்ட அவர் -

வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட பின்னர். கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் இரு கட்டளைகள் வழங்கப்பட்டதற்கினங்க அந்த விக்கிரகங்கள் மீளவும் பிரதிஷ்டை செய்யும் செயற்பாடு இடம்பெற்றிருக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எனவே நீதிமன்றில் தவறான கருத்துக்கள் எதும் சொல்லப்பட்டால் அதற்கு பதில் அளிக்கும் விதமாக இன்றைய தினம் (நேற்று) நேரிலே ஆலயத்திற்கு சென்று விடயங்களை அவதானித்துள்ளோம். இது ஒரு மகிழ்ச்சியான விடயம்.

இதேவேளைகடந்தவெள்ளிக்கிழமை ஆலயத்துக்கு வருகைதந்த பக்தர்களின் அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டமைதேவையற்ற ஒரு விடயம்.

அவ்வாறானநடவடிக்கை இடம்பெறவில்லை. பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்வதற்கு இடமளிக்கவேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது.

அதனைமதித்துஅனைத்து அரச உத்தியோகதர்களும் செயற்படவேண்டும். செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். - எனத் தெரிவித்துள்ளார்.

# ‘இரத்மலானே குடு அஞ்சு’வை நாட்டுக்கு கொண்டுவர ஏற்பாடு!

கொழும்பு, மே 01

பிரான்ஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பாரிய போதைப்பொருள் கடத் தல்காரரும் பாதாள உலகத் தலைவனுமான ‘இரத்ம லானே குடு அஞ்சு’ எனஅழைக்கப்படும்சிங்கரகே சமிந்த சில்வாவை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள்கடத்தல் மற்றும் பல கொலைகளில் சந்தேகநபராககருதப்படும் ‘குடு அஞ்சு’ என்பவரை பிரான்ஸ் பொலிஸார் கடந்த புதன் கிழமை கைதுசெய்துள்ளனர் எனவும், பிரான்ஸ் பாதுகாப்பு தரப்பினர் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக இதனை அறிவித்துள்ளனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

குடும்பத் தகராறு தொடர்பாக அவரது மனைவி பிரான்ஸ் பொலிஸில் செய்த முறைப்பாட்டின்பிரகாரம், ‘குடு அஞ்சு’ கைதுசெய்யப்பட்டார் எனக் கூறப்படும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, இவரை நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# பாவனைக்கு உதவாத ரின் மீன்களை சதொச நிலையம் மூலம் விற்பனை

## நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் புதிய குற்றச்சாட்டு

2021இல் பாவனைக்குதவாத ரின்மீன்களை விற்பனை செய்யும்படி சதொசவிற்கு வர்த்தக அமைச்சு வேண்டுகோள் விடுத்தது என நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள்நிறைவேற்று இயக்குநர் துசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2021ஜூலையில் சதொசவிற்கு வர்த்தக அமைச்சு அனுப்பிய இது தொடர்பாக மின்னஞ்சல்களை அவர் வெளியிட்டுள்ளார். துறைமுக அதிகார சபை தடை செய்த ரின்மீன்களை விற்பனை செய்யுமாறு வர்த்தகஅமைச்சு வேண்டுகோள்விடுத்துள்ளது.

துறைமுக அதிகார சபை தடைசெய்துள்ள ரின்மீன்களை சதொச மூலம் விற்பனை செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என துசான் குணவர்த்தன வெளியிட்டுள்ள ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்குதவாத ரின் மீன்கள் என அறிவிக்கப்பட்டவற்றை எவ்வாறு விற்பனை செய்தது என கேள்வி எழுப்பியுள்ள துசான் அவ்வேளை இலங்கை நுகர்வோர் அதிகார சபை இதனை தடுக்க முயன்றது. ஆனால் வர்த்தக அமைச்சு விற்பனையை தொடர விரும்பியது எனவும் குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்தின் ஆதரவுடனான படுகொலை சதொசவில் தரங்குறைந்த பொருள்களே அதிகளவில் காணப்படுகின்றன எனவும் நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார்.

# ரயில் சேவையை தனியார்மயப்படுத்த அரசு முயற்சி ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே.01

ரயில் சேவையை தனியார்மயப்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைப்பதன் நோக்கம் முறையற்றது என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

ரயில்சேவையில்நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின், ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைக்கவேண்டும். அதற்கான சட்டதிருத்தத்தை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்துஅமைச்சர்பந்துலகுணவர்தனவெள்ளிக்கிழமைநாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

ரயில்வேத் தொழிற்சங்கங்களின் பிரதானிகளுக்கும், போக்குவரத்து அமைச்சருக்கும், ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளருக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சின்போது இதனையே எடுத்துரைத்தார்.

ரயில்வே சேவை என்பது மக்களுக்கான பொதுப்போக்குவரத்து சேவை. ஆகவே, இலாபத்தை எதிர்பார்க்க முடியாது என்பதை போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார்.

ரயில்வேசேவையைஅதிகார சபையாக மாற்றினால் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டில் அமைச் சர் உள்ளார். ரயில்வே சேவையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு திணைக்கள மட்டத்தில் தீர்வு காண முடியும். ஆனால், இதுவரை தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ரயிவ்கள் தற்போது அடிக்கடி தடம் புரள்கிறது. பயணி கள் ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருக்கும்போது ரயில் சேவைகள் இரத்து செய்யப்படுகின்றன.

ரயில்வே சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்பை தோற்றுவித்து மக்களின் விருப்பத்துடன் ரயில் சேவையை தனியார்மயப்படுத்த அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைக்கும் நோக்கம் முறையற்றது. - என்றார்.

# யாழில் சொந்தமாக காணி வாங்கிய பிக்கு விகாரை அமைப்பதற்கும் விண்ணப்பம்



யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் தனியார் காணி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ள பௌத்த பிக்கு ஒருவர், அக்காணியினுள் விகாரை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் கந்தரோடை பகுதியில் தமிழ் - பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களும், அதன் எச்சங்களும் காணப்படுகின்றன. அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்திற்கு அருகில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான சுமார் 06 பரப்பு காணியை தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த காணிக்குள் புதிய விகாரை ஒன்றை அமைக்கவுள்ளதாகவும், விகாரை அமைக்கவுள்ள காணிக்கு அருகில் தொல்லியல் எச்சங்கள் காணப்படுவதால், விகாரை அமைப்பதால் அதற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா ? அக்காணியில் விகாரை அமைக்கலாமா ? என தொல்லியல் திணைக்களத்திடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

தொல்லியல் திணைக்களம் விகாரை அமைக்க அனுமதி வழங்கியவுடன், ஏனைய அனுமதிகளை விரைந்து எடுத்து, விகாரை கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க பிக்கு தயாராக உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொரோனாத் தொற்றினால் இருவர் உயிரந்தனர்: கொலன்னாவ மரணவிசாரணை அதிகாரி தகவல்

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தீவிரமடைந்து இரண்டு நாள்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என கொலன்னாவ மரண விசாரணை அதிகாரி காஞ்சனா விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஹமந்துவ பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண்ணும், யட்டியந்தோட்டை பனாவத்தையில் வசிக்கும் 73 வயதுடைய ஆணும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த பெண் கடந்த 27ஆம் திகதி ஜனுர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

மற்றைய நபர் 28ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்று மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் இருப்பதாகவும் குறிப்பாக முகக்கவசம் அணிந்து சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவது மிகவும் பொருத்தமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, மருத்துவமனை வட்டாரங்களின்படி, கொவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான நோயாளிகள் ஜனுர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# மிஹிந்தலையில் பெண் படுகொலை: முன்னாள் இராணுவ சிப்பாய் கைது!

மிஹிந்தலை,தொரமடலாவ பகுதியில் உள்ள வீடொன்றில் தனியாக இருந்த 49 வயதுடைய அங்கவீனமுற்ற பெண்ணை கொலை செய்ததாக கூறப்படும் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரை கைது செய்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பல வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றி தலைமறைவானவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மிஹிந்தலை, டொரமடலாவ, மிஹிந்தலை என்ற முகவரியில் வசிக்கும் ஸ்ரீயானி விஜேசிங்க (வயது - 49) என்ற மாற்றுத்திறனாளியான திருமணமாகாத பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

# ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் சடுதியாக வீழ்ச்சி; மார்ச்சுடன் ஒப்பிடுகையில் 15 சதவீத வீழ்ச்சி!

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதம் 50.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், கடந்த ஏப்ரல் மாதம் 35.3 சதவீதமாக சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்கு உணவு மற்றும் உணவல்லாப்பொருள்களின் விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதைவிடவும் மிக உயர்வான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமையே பிரதான காரணமாக அமைந்திருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த மார்ச்சில் 47.6 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் ஏப்ரலில் 30.6 சதவீதமாகவும், மார்ச் மாதம் 51.7 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் ஏப்ரல் மாதம் 37.6 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் கடந்த ஏப்ரல் மாதம் (1.39) சதவீதமாகப் பதிவானதுடன், இது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணில் இதுவரையிலும் பதிவான அதிகூடிய மாதாந்த வீழ்ச்சியாகும். இதற்கு உணவல்லாப்பொருட்களின் விலைகளில் (1.37) சதவீதமாக அவதானிக்கப்பட்ட விலைவீழ்ச்சி காரணமாக அமைந்துள்ளது. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த மார்ச்சில் 39.1 சதவீதத்திலிருந்து ஏப்ரல் மாதம் 27.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், அண்மைய காலங்களில் பின்பற்றப்பட்டுவரும் இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கையின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்கமானது இவ்வாண்டு முழுவதும் தொடருமெனவும், இவ்வாண்டின் பிற்பகுதியில் பணவீக்கமானது ஒற்றை இலக்கப்பெறுமதிக்குக் கொண்டுவரப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கொழும்பு, மருதானையில் சிக்கியுள்ள காலாவதியான உணவு சுவையூட்டிகள்



கொழும்பு, மருதானை தொழில்நுட்பக் கல்லூரி (டெக்னிக்கல்) சந்தியில் உள்ள உணவுக் களஞ்சியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, உணவின் சுவையூட்டுவதற்கு பயன்படுத்தப்படும் செயற்கை வாசனை திரவிய தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான உணவும் காலாவதியாகாத உணவும் ஒரே இடத்தில் விநியோகம் செய்யப்பட்டதாக இந்தச் சுற்றிவளைப்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காலாவதியான உணவுப் பொருள்களை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த முறைப்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

உணவை சுவைக்க பயன்படுத்தப்படும் இந்தச் செயற்கை சுவையூட்டிகள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளிலேயே காலாவதியாகிவிட்டது என கண்டறியப்பட்டுள்ளது.

**840,000 அமெரிக்க டொலர்கள் மோசடி:**

# இலங்கை மருத்துவருக்கு அமெரிக்காவில் சிறை

அமெரிக்காவின் ஸ்ட்ராட்ஃபோர்ட் நகரில் மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வந்த இலங்கை மருத்துவர் ஒருவர், சுகாதார சேவைகளை வழங்குவதாகத் தெரிவித்து அந்நாட்டு அரசாங்கத்திடமிருந்து சுமார் 840,000 அமெரிக்க டொலர்களை பெற்று, மோசடி செய்த குற்றத்துக்காக அவருக்கு பிரிட்ஜ்போர்ட் நீதிமன்றமொன்று நான்கு வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த குறித்த மருத்துவர் கடந்த நவம்பரில் மோசடி குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதால் தண்டனை நிலுவையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மெடிகெயார் என்ற மருத்துவ கிளினிக்கின் உரிமையாளரும் தலைவருமான இவர், தனது வைத்தியசாலையில் வரும் நோயாளிகளுக்கு மனநல சேவைகளை வழங்குவதற்காக மாநில மருத்துவகாப்பீட்டிலிருந்து சுமார் 840,000 அமெரிக்க டொலர்களை பெற்று மோசடி செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

# சூடானிலிருந்து வெளியேற்றப்பட்ட 14 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, மே 01

சூடானில் நிலவும் நெருக்கடி நிலைமை காரணமாக வெளி யேற்றப்பட்ட 14 இலங்கையர்கள் பாதுகாப்பாக நாட்டை வந்தடைந்துள்ளனர். இவர்கள் சனிக்கிழமை இரவு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

சூடானிலிருந்து வெளி யேற்றப்பட்ட 14 இலங்கையர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததுடன், அவர்களை வெளிவிவகார அமைச்சின் தூதரகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சிசிர சேனவிரத்ன வரவேற்றார்.

வெளிவிவகார அமைச்சின் ஒருங்கிணைப்பு மற்றும் சவூதி அரேபியா அரசாங்கத்தின் தாராளமான உதவியால் அவர்களது வெளியேற்றம் எளிதாக்கப்பட்டது.

ரியாத் மற்றும் கெய்ரோவில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் ஜெட்டாவில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவை சவூதி அரேபிய, இந்திய அரசாங்கத்தின் அதிகாரிகளுடன் இணைந்து கார்ட்டூமில் வசிக்கும் இலங்கையர்களை மீட்க கோரிக்கை விடுத்துள்ளன.

நைரோபியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவையும் இலங்கையர்களை வெளியேற்றும் பணியில் உதவிகளை வழங்கியுள்ளன.

சூடானின் நிலைமையை வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், இன்னும் அங்கு சிக்கியிருக்கும் இலங்கை பிரஜைகளால் நாடு திரும்புவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டால், அவர்களுக்கு உதவத் தயாராக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். உரும்பிராய் விபத்தில் மூதாட்டி உயிரிழப்பு வைத்தியசாலையில் சேர்க்கமுன் நகைகள் மாயம்

யாழ்ப்பாணத்தில் விபத்துக்கு உள்ளாகிய பெண்மணியின் தங்க ஆபரணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என அவரது கணவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் உரும்பிராய் வடக்கை சேர்ந்த கனகநாயகம் உமாதேவி (வயது - 72) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்மணி வீட்டில் இருந்து சைக்கிளில் வெளியில் சென்று, மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை உரும்பிராய் பகுதியில் அவருக்கு பின்னால் வேகமாக வந்த கப் ரக வாகனம் மோதி விபத்துக்கு உள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு அம்புலன்ஸுக்கு அறிவித்து, அவரை வைத்தியசாலையில் சேர்க்க முற்பட்ட வேளை, விபத்தை ஏற்படுத்திய கப் வாகனத்தில் வந்த நபர்கள் தாம், தமது வாகனத்தில் வரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறோம் என கூறி அவரை வாகனத்தில் ஏற்றி, போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் அறிந்து வைத்தியசாலை சென்ற பெண்மணியின் கணவர் உள்ளிட்ட உறவினர்கள் வைத்தியசாலையில் நின்ற வேளை பெண்மணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வேளையே தனது மனைவி அணிந்திருந்த தங்க சங்கிலி, மோதிரம் மற்றும் காப்பு என சுமார் 06 பவுண் நகைகளை காணவில்லை எனக் கூறியுள்ளார்.

பெண்மணியை வைத்தியசாலையில் சேர்க்கும் போதே அவர் எவ்விதமான நகைகளும் அணிந்திருக்க வில்லை என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்க முதலே, தங்க நகைகள் அபகரிக்கப்பட்டு விட்டன எனவும், வைத்தியசாலையில் சேர்த்தவர்களே நகைகளை அபகரித்து இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. விபத்து சம்பவம் மற்றும் நகைகள் அபகரிப்பு தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை விபத்தை ஏற்படுத்திய கப் ரக வாகனத்தில் வந்தவர்கள் மது போதையில் இருந்தனர் எனவும் மிக வேகமாக வந்தே பெண்மணியை மோதி தள்ளியதாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீதியில் கண்காணிப்பு கமரா மற்றும் வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகில் உள்ள கண்காணிப்பு கமராக்களின் வீடியோ பதிவுகள் ஊடாக கப் வாகனத்தினை அடையாளம் கண்டு, கப் வாகனத்தில் பயணித்தவர்களை கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னடுத்துள்ளனர்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=


Neithal
Beach City
மே தினத்தன்று உங்களை
உற்சாகப்படுத்திக்கொள்ள
பொருத்தமான இடம்!
இயற்கை – பொழுதுபோக்கு – சுவையுணவு
Amman kovil Road,Navatkuli, Jaffna
Contact - 077 727 6818




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை 30.04.2023 கதிர் 44

## மின் தாக்கி இன்று ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

மின் ஒட்டு வேலையில் ஈடுபட்டிருந்தபோது இந்த அசம்பாவிதம் 2☞

## பாலியல் குற்றச்சாட்டில் வவுனியா இளைஞன் கைது

வவுனியாவில் 6 வயது சிறுமி ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியகுற்றச்சாட்டில் இளைஞனைக் கைது செய்துள்ளதாகப்பூவரசன்குளம்பொலிசார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாய் வெளிநாட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து வருகின்றார்.

தந்தை இல்லை. வவுனியா, பூவரசன்குளம் பகுதியில்அமைந்துள்ள முச்சக்கர வண்டிசாரதி ஒருவரின்வீட்டில் மாதாந்த கொடுப்பனவின் அடிப்படையில் குறித்த சிறுமி தங்கி இருந்துள்ளார்.

சிறுமிக்கு காய்ச்சல் ஏற்பட்டநிலையில்பூவரசன்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிறுமிக்கு அசாதாரண இரத்தப்போக்கு இருப்பதை அவதானித்த

வைத்தியர்கள் பூவரசன்குளம் பொலிசாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார் குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டில் தங்கியிருந்த இளைஞரைக் கைது செய்துள்ளனர். (100)

# தெற்கில் நாளை பெருமெடுப்பில் பேரணிகள் வடக்கு கிழக்கில் பெரும் நிகழ்வுகள் இல்லை

### கிளிநொச்சி, முல்லைத்தீவில் ஓரிரு நிகழ்வுகள்

**தொழிலாளர் நாளான மே முதல் நாளையொட்டி நாளை இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் தெற்கில் பெருமெடுப்பில் பேரணிகளையும் பொதுகூட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளன. அதேநேரம் வடக்கு கிழக்கில் அரசியல் கட்சிகளால் எந்தவொரு பெரு நிகழ்வும் அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்படவில்லை.**

**ஐக்கிய மக்கள் சக்தியின் மே நாள் கூட்டம் கொழும்பு கோட்டை குணசிங்கபுரமைதானத்தில்இடம்பெற்றது. ஊர்வலத்தைத்தொடர்ந்து இந்தப் பொதுக்கூட்டம் பெருமெடுப்பில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

பொது ஜன பெரமுனவின் மே நாள் பேரணியும் கூட்டமும் கொழும்பு கம்பெல் பூங்காவில் இடம்பெறவுள்ளது. ஜேவிபியின் மே நாள் பேரணியும் கூட்டமும் கொழும்பு பேகர் ரெக்றியேசன்ஸ் கிளப் (பிஆர்சி) மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

டலஸ் அழகப்பெருமா மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் மே நாள் பேரணி மற்றும் கூட்டம் கண்டியில் இடம்பெறவுள்ளது.

அதேநேரம் வடக்கில் மே தின நிகழ்வுகள் ஏதும் பெருமெடுப்பில் ஏற்பாடு செய்யப்படவில்லை. வழக்கமாக கலாசார ஊர்திகள், பேரணிகள் என்று பெருமெடுப்பில் தமிழ்க் கட்சிகளாலும் மே தின நிகழ்வுகள் நடத்தப்படுவது வழமை. எனினும் இந்தத் தடவை சிறு நிகழ்வுகள் மட்டுமே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தமிழ் அரசுக் கட்சியின் மே தின நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெறும் என்று கட்சியின் கிளிநொச்சிக்கிளை அறிவித்துள்ளது.இதுதொடர்பில் கட்சிக் கிளையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில், எதிர்வரும் மே, முதலாம் நாள், கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ள வடக்கு மாகாணம் தழுவிய தமிழ்த்தேசிய மே நாள் நிகழ்வுக்கு வலுச்சேர்க்குமாறு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினர் அழைப்பு விடுக்கின்றனர்.

சமகாலத்தில், தமிழ்த்தேசிய இனம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துக் குரல்கொடுக்கும் இளைஞர், யுவதிகளின் பெருந்திரட்சியின் ஊடாக, பன்னாட்டுச் சமூகத்துக்கும், இலங்கை இனவாத அரசுக்கும் வலுவான செய்தியைச் சொல்லத்தக்கவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மே நாள் நிகழ்வுகளில், அனைத்துத் தரப்பினரையும் அணிதிரளுமாறு அழைத்து நிற்கிறோம் – என்றுள்ளது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் இணைந்து நடத்தும் மே தினப் பொதுக் கூட்டம் மல்லாவி, துணுக்காயில் உள்ள சிவன் கோயிலடியில் காலை 9.30 மணி முதல் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தாயகம், தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்காகவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிவதற்கும், தமிழ் இனப்படுகொலைக்கான நீதிக்குமாகவும் சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தியும், தமிழ்த் தேச தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழ்த் தேசத்திலுள்ள விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், முழுமையான மீள்குடியேற்றத்தை வலியுறுத்துதல், இராணுவ மயமாக்கலை தடுத்தல், கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தியும், புதிதாக கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வலியுறுத்தியும் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய மேதின எழுச்சிப் பேரணியில் அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் – அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தவிர மார்க்ஸிய லெனிசக் கட்சியும் மேதின நிகழ்வுகளை நடத்துவதாக அறிவித்துள்ளது. எனினும் பெருளமவிலான மே தினக் ஊர்வலங்களுக்கோ பொதுக் கூட்டங்களுக்கோ வடக்கு கிழக்கில் ஏற்பாடு செய்யப்படவில்லை.

# திட்டமிட்ட சிங்களமயமாக்கலுக்கு தமிழர்கள் ஒரு தேசமாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

### இப்படிச் சொல்கிறார் கஜேந்திரகுமார்

திட்டமிட்ட சிங்கள மயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறி போய்க் கொண்டே இருக்கும் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தையிட்டியில்சட்டவிரோதமாகத் தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரையினை மக்களின் கோரிக்கைக்கு இணங்க பார்வையிட்டு களநிலவரங்களை ஆராய்ந்தபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விகாரை அமைக்கப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தமானது. சட்டவிரோதமான இந்த கட்டட வேலைகள் இரண்டு வருடத்திற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட பொழுதே மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்களிலும் பிரதேச அபிவிருத்திச் சபைக்கூட்டங்களிலும் இந்த சட்டவிரோதச் செயற்பாடு குறித்து வெளிப்படுத்தப்பட்டது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக் கோரிக்கையும் வைக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக இன்னுமொரு விசேட கூட்டம் கூடப்படும் என அப்போது வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் எந்தவிதமான கூட்டங்களோ நடவடிக்கையோ எடுக்கப்படாமல் இன்று இந்த விகாரை இராணுவத்தினரின் முழுப் பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் மட்டுமல்ல இன்று தமிழர் தாயக நிலப்பகுதி முழுவதிலும் சிங்கள மயமாக்கல் வேலைத்திட்டத் திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் இந்த விடயத்தினை ஐ.நா மட்டிலும் பதிவு செய்திருக்கிறோம். ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் மட்டத்தில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இன்று இப்பபுதியிலுள்ள மக்களின் தொண்டைகளில் கை வைத்த நிலையில்தான் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறானநிலைகள் மத்தியில் அவர்கள் எங்களை அழைத்து இந்த விகாரை சம்மந்தமாக பிரச்சினைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள். எங்களைப் பொறுத்தவரையில் இந்த மாதிரியான இனவாத போக்கிற்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறிபோய்க் கொண்டே இருக்கும். நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கெதிராக எங்களுடைய முழு எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம். எங் களுடைய எதிர்ப்புக்களைத் தாண்டியே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் – என்றார். (03)

# மஹிந்தவைப் பிரதமராக்க மே நாள் கூட்டத்தில் முடிவு

### ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் முஜிபுர் தெரிவிப்பு




பொது ஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்கும் தீர்மானத்தினை நாளைய மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநாகர சபையின் முதல்வர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுன மே தினக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதன் பின்னணியில் ஒரு நிகழ்ச்சிநிரலே உள்ளது. அந்த நிகழச்;சி நிரலானது, மஹிந்தவை மீண்டும் பிரதமராக்கும் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தினை முழுமையான நடைமுறைப் படுத்துவற்கு நாளைய மே தினக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப்படவுள்ளது. இதன் மூலம் மஹிந்த பிரதம ராக்கப்படுவார். இந்தச் செயற்பாடுகளுக்கு எல்லாம் ஆதரவளித் துக்கொண்ருப்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமன ரணில் விக்கிரம சிங்கவேதான். அவர்தான் ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாத்து வருகின்றார் – என்றார்.

## மே தினத்திற்கு விசேட பாதுகாப்பு



மே தினக் கூட்டங்கள் நாளை நடைபெறவுள்ள நிலையில் பொலிஸார் விசேட பாதுகாப்ச் செயற்பாடுகளில் களமிறங்கியுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில்:

கொழும்பு, நுகேகொடை, ஹட்டன் மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் இந்த பாதுகாப்புச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு தனியான ஒழுங்குகள் செய்யப்பட்டுகின்றன.

கொழும்பில் நடைபெறும் மே தினப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்காக மட்டும் 3,500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர் –என்றார்.

### பல்கலைக்கழங்களின் செயற்பாடுகள் தொடர்பில்

# நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் வசந்த முதலிகே வாக்குமூலமளிப்பு

களனி பல்கலைக்கழகத்தின் கணனி மற்றும் தொழிநுட்பபீடம் 12 மாதங்களாக பெறுபேறுகளை வெளியிடவில்லையென பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் அமைப்பின் அழைப்பாளர் வசந்த முதலிகே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்து–வதற்குரிய பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் வாக்குமூலம் அளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

களனிப்பல்கலைக்கழகத்தின் கணினி மற்றும் தொழிநுட்ப பீடம் 12 மாதங்களாகப் பெறுபேறுகளை வெளியிடாததால் மாணவர்கள் நெருக்கடிளுக்கு உள்ளாகியுள்ளனர்.

கல்விஎன்பது உரிமையே தவிர சலுகை அல்ல, உயர்கல்வி முறையின் குறைபாடுகளினால் பலமாணவர்களின் பல்கலைக்கழகக் கல்வி தோல்வியடைந்து வருகிறது. மேலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சுகாதார விஞ்ஞான பீடம் இதுவரை கல்வி நாட்களின் அட்டவணையைச் சமர்ப்பிக்கவில்லை எனவும், சப்ரகமுவ பல்கலைக்கழகம் பரீட்சைகளை நடத்துவதற்கு இணங்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முறையிடலாம்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்கிய அரச பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் கிடைக்காவிடில் அது தொடர்பில் தமது அமைச்சிற்கு உடன் தெரியப்படுத்துமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தலில் போட்டியிட்ட அரச அலுலலர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அடிப்படைச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவை உரிய வகையில் வழங்கப்படவில்லையெனத் தகவல்கள் கிடைத்துள்ளன. சம்பளம் கிடைக்காமை தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன– என்றார்.

# பேச்சு இன்றேல் 3ஆம் திகதி முதல் தொடர் போராட்டம்

### பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்க சம்மேளனம் அறிவிப்பு

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரகாரம் எம்முடன் பேச்சு நடத்தி உரிய தீர்வு வழங்காது விட்டால் எதிர்வரும் மூன்றாம் திகதி முதல் தொடர் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடாபில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சாருத்த இலங்கசிங்க தெரிவித்ததாவது:

தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு சனிக்கிழமை கூடியிருந்தது. இதன்போது 2☞

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்; அரசியல் கட்சிகளுடன் மே 9 பேச்சு

### நீதி அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு



நாடாளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுடனும் அடுத்த அமர் வில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி விஜயதாச ராஜபக்ச இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அச்சட்டமூலம் தொடர்பில் மே 9 தொடங்கவுள்ள நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். பயங்கரவாதத் தடை சட்ட மூலம் தொடர்பில் எந்தக் கட்சியுடன் கலந்துரையாடுவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.


அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்ட மூலம் தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் தமது ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை எழுத்து–மூலம் அனுப்பமுடியும். கரு ஜயசூரியவைத் தலைமையகமாகக் கொண்ட சமூகநீதிக்கான தேசிய இயக்கம் மட்டுமே இதுவரையில் தமது யோசனைகளை எமக்கு அனுப்பியுள்ளது. பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கருத்திற் கொண்டு, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகவே விமர்சனம் செய்பவர்கள் அவற்றைச் சுட்டிக்காட்டி தமது பரிந்துரைகளை வெளிப்படுத்தவேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொவிட்டில் இறந்தவர்கள் தொடர்பான அரசின் பிழையான தீர்மானத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு கிடைக்குமா?

## ரவூப் ஹக்கீம் சபையில் கேள்வி



கொவிட் நிபுணர்குழுவின் தீர்மானங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இடமிருக்கிறது. அத்துடன் நிபுணர்குழுவின் பிழையான தீர்மானத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமா என கேட்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீம் சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது இடையீட்டு கேள்வியின் போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் இதுதொடர்பாக தொடர்ந்து குறிப்பிடுகையில் -

வைரஸ் நீரின் ஊடாக பரவும் என்ற கொள்கையை ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரே கொண்டுவந்தார். அதனடிப்படையிலேயே கொவிட் தொற்றில் இறந்த இஸ்லாமியர்கள் மாத்திரமின்றி பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர் மிகவும் தூரப்பிரதேசமான ஓட்டமாவடிக்கு எடுத்துச்சென்று அடக்கம் செய்யப்பட்டனர்.

இது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படாத, இனவாத அடிப்படையில் பார்க்கப்பட்டது. எந்தவொரு வைரஸும் நீர் ஊடாக பரவுவதில்லை என விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இறந்தால் அவருடன் இருக்கும் வைரஸ்களும் இறக்கும் என இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதனால் அரசாங்கம் இந்த விடயத்தில் சில இனவாதிகளால் பிழையாகவழிநடத்தப்பட்டிருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றதா எனக் கேட்கிறேன்.

அத்துடன் நிபுணர்குழுவின் பிழையானதீர்மானம் காரணமாக அதிகமான மக்கள் அந்த காலகட்டத்தில் இனவாத அடிப்படையில் பாதிக்கப்பட்டிருந்ததுடன் அதிகமான மன அழுத்தங்களுக்கும் ஆளாகி இருந்தார்கள். அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இடமிருக்கிறது.

அத்துடன் நாங்கள் எமது பிரச்சினைகளை அப்போது சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாரச்சிக்கு தெரிவித்தபோது, அவரும் எமது கோரிக்கைகளை கொவிட் குழுவுக்கு திருப்பியிருந்தார்.

நிபுணர்குழுவை அரசாங்கமே தெரிவுசெய்திருந்தது. அவர்கள் இனவாத அடிப்படையிலேயே இந்த விடயத்தை மேற்கொண்டிருந்தார்கள். அதனால் இவர்களை மாற்றுமாறு நாங்கள் பல தடவைகள் தெரிவித்திருந்தோம்.

எனவே, நிபுணர்குழுவின் அந்த தீர்மானம் பிழையானது என்பது நாடாளுமன்றத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என கேட்கிறேன்.

நிபுணர் குழுவின் தீர்மானம் காரணமாக அரசாங்கத்துக்கும் அதிக செலவு ஏற்பட்டது. அதேபோல் இறந்தவர்களின் குடுபத்தினரும் பாதிக்கப்பட்டனர்.

அதனால் தற்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்க இடமிருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என கேட்கிறேன்.
- என்றார்.

# ஐந்து வயதில் தென்கொரியாவிலிருந்து ஆங்கிலம் தெரியாத சிறுமியாக வந்தவர் இன்று மிகத்திறமையான இராஜதந்திரி!

## ஜூலி சங்கிற்கு அன்டனி பிளிங்கென் பாராட்டு



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் மிகச்சிறந்த பங்களிப்பு தொடர்பாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கு முதலாவது கொரிய குடியேற்றவாசிகள் சென்று 120 வருடங்களாவதை குறிக்கும் நிகழ்வில் ஜூலி சங்தொடர்பாக இராஜாங்க செயலாளர் கருத்து வெளி யிட்டுள்ளார்.

சியோலில் இருந்து கலிபோர்னியாவிற்கு ஜூலி சங் 1977 ஆம் ஆண்டு குடிபெயர்ந்த வேளை அவருக்கு 7 வயது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வேளை அவர் ஓர் ஆங்கிலவார்த்தை கூட தெரியாதவராக காணப்பட்டார். அவரது தந்தைக்கு பொறியல் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அவரது தாயார் இரவில் உணவகங்க ளில் கோப்பை கழுவினார். பின்னர் அவரது தாயார் ஒரு நூலகவியலாளர் ஆகவும் தேவாலயத்திலும் பணிபுரிந்தார் என அன்டனி பிளிங்கென் தெரி வித்துள்ளார்.

விண்வெளியில் விண்கலங்களில் 0 வளையங்கள் உறைவதைதடுக்க அவரது ( ஜூலி சங்கின்) அப்பா பின்னர் ஒரு வெப்பமாக்கல் அமைப்பை வடிவமைத்தார் அதுதான் சலஞ் சர் வெடிப்பை ஏற்படுத்தியது.

நாசா தனது விண்வெளி பயணங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிகோலியது.

ஜூலி சங் முதன் முதலில் பிக்கரிங் பெலோ குழுவின் ஒருவராக இராஜாங்க திணைக்களத்தில் இணைந் தார். இது குறைந்தளவு பிரதிநிதித்துவம் பெற்ற சிறுபான்மையினத்தவர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற் பாடாகும்.

இன்று ஜூலி சங்கின் தந்தையின் பொறியியல் நிறுவனம் அமெரிக்கா தென் கொரியா மற்றும் ஆர்மிட்டெஸ் உடன்படிக்கையில் இணைந்துள்ள ஏனைய நாடுகளுக்கு விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் பொறிமுறையில் உதவிவருகின்றது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதல் பெண் மற்றும் வெள்ளையினத்தவர் இல்லாத முதல் நபர் ஆகியோரை விண்வெளிக்கு அனுப்பும் தொழில்நுட்பத்திற்கும் ஜூலியின் தந்தையின் நிறுவனமே உதவி.

ஒரு குடும்பத்தின் மூலம் அமெரிக்காவையும் தென்கொரியாவையும் பிணைக்கும் விடயம் இதுவென்றால் எங்கள் இருநாடுகளையும் பிணைக்கும் விடயங்கள் எவ்வளவு ஆழமானவை என நினைத்துபாருங்கள் எனவும் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

# எஸ்.பி. திசநாயக்க புதிய கல்வியமைச்சர்?



அமைச்சரவை மாற்றத்தின் போது எஸ்.பி.திசநாயக்க உயர் கல்வியமைச்சராக நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எஸ்.பி.திசநாயக்க முன்னரும் கல்வி அமைச்சராக பதவி வகித்துள்ளமையால் அவர் இந்த பதவிக்கு பொருத்தமானவர் என்ற கருத்து நிலவுவ தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே மாதத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறலாம் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வைத்தியசாலைக்குள் இடம்பெற்ற கத்திக்குத்தில் 24 வயது நபர் சாவு!

24 வயதுடைய இளைஞன் ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குள் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

மதவாச்சி பிரதேசத்தில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்ட குறித்த நபர், வியாழக்கிழமை மாலை ஒரு குழுவினரால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை அதிகாலை வைத்தியசாலையின் விடுதிக்குள் நுழைந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் பாதிக்கப்பட்டவர் கழுத்து மற்றும் காலில் கத்தியால் தாக்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட நபர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மோ. சைக்கிள் திருட்டுக் குழு வெள்ளவத்தையில் மாட்டியது

## 10 மோ. சைக்கிள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

கொழும்பு வெள்ளவத்தைப்பகுதியில் நீண்டகாலமாக வாகனத் திருட்டில் ஈடுபட்டவர்களிடம் இருந்து 10 மோட்டார் சைக்கிளை வெள்ளவத்தை பொலிசார் மீட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் நீண்டகாலமாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பக்க கண்ணாடி திருட்டில் ஈடுபட்ட இரண்டு சந்தேகநபர்களை வெள்ளவத்தை பொலிசார் கைது செய்து விசாரணை செய்த சமயமே மோட்டார் சைக்கில்களும் பக்க கண்ணாடிகளும் மீட்கப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சுபாஸ் காந்தவெல தெரிவித்தார்,

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 மோட்டார் சைக்கிள்களும் ஒரு முச்சக்கரவண்டியும், வாகனப் பக்க கண்ணாடிகள் 20சோடியும் மீட்கப்பட்டுள்ளன.

திருடப்படும் கண்ணாடிகளை விற்பனை செய்த பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த வியாபார நிலைய உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் கல்கிசை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 39 வயதுடைய சந்தேகநபர் என தெரிவிக்கப்படுகிறது

கைதுசெய்யப்பட்டவர்கள் நீண்டகாலமாக கொழும்பு நகர பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை நூதனமாகத் திருடி அந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகன பக்க கண்ணாடிகளை திருடி விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை தொடர்பில் பல்வேறுபட்ட முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து வெள்ளவத்தை பொலிஸ் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.





## மின்தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

கோப்பாய் பிரதான வீதியில் இயங்கி வரும் வாகன திருத்தகத்தில் அவர் பணியில் இருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா சுஜிதரன் (வயது 40).

உயிரிழந்தவரின் சடலம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப் பட்டுள்ளது.

## பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்களின் புதிய வரிக்கொள்கை உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் எமது கோரிக்கைகளையும், பேச்சு ஊடாக உரிய தீர்வைப் பெறுவதற்கான சூழலை ஏற்படுத்து மாறும் கோரியுள்ளோம். எனினும், அதற்குத் தற்போது வரையில் பதில் கிடைக்கவில்லை.

இந்நிலையில் இன்றையதினம் மீண்டும் கலந்துரையாடவுள்ளோம்.

இந்தக் கூட்டத்தின்போது தொடர் தொழிற்சங்க நடவடிக்கைகளை எதிர்வரும் மூன்றாம் திகதி முதல் ஏனைய தொழிற்சங்கங்களுடனும் இணைந்து முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் – என்றார்.

# இந்தாண்டு மே தினத்துடனாவது மீனவர் பிரச்சினை தீரவேண்டும்



உலகத் தொழிலாளர் தினத்துடனாவது வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

வடக்கு கடலில் நீண்ட காலமாக சட்ட விரோதமான கடற்றொழில் முறைகள் மற்றும் கடல் அட்டை பண்ணை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு உலக தொழிலாளர்கள் தினத்திலாவது தீர்வு கிடைக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கடல் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் கருத்துரையாடி அவர்களைப் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகக் கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இம்முறை தொழிலாளர் தினத்தில் இருந்து தொழிலாளர்களுக்குரிய சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என் பதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமை தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் கட்சிகள் முழு அடைப்புக்கு அழைப்பு விடுவதன் மூலம் சாதாரண தொழிலாளர்களுக்கும் நாள் கூலிகளுக்குமே பாதிப்பு ஏற்படு கின்றது.

மே தினத்தில் தொழிலாளர்களுக்காக குரல்கொடுப்பதற்காக தமிழ்கட்சிகள் ஒன்றாக இணைய வேண்டும் –என்றார். (03)

# காலநிலை மாற்றங்களின் பாதிப்புகளை எதிர்கொள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவுவோம்

## ஜனாதிபதி ரணில் திடசங்கற்பம்



காலநிலை மாற்றதால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு தேவையான வளங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் இலங்கை முன்னணியில் இருப்பதை தான் உறுதி செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2021-2022 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி -

உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால் மாத்திரம் முடியாது. சூழலை மாசுபடுத்துவதற்கு காரணமாக உள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள் நிதியுதவி அளித்து இதற்குப் பங்களிக்க வேண்டும்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுக்க இலங்கை முதன்மையான முயற்சிகளை எடுக்கும். பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்பு தொடங்கும் வேளையில், இலங்கையை பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை பசுமைப் பொருளாதாரமாக மாறும்போது, அதற்கான புதிய சட்டங்களும் தேவைப்படும். நமது சுற்றாடல் சட்டம் 1980களில் நிறைவேற்றப்பட்டதுடன் அதன் பிறகு பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, அடுத்த சில ஆண்டுகளில் புதிய சுற்றாடல் சட்டம் மற்றும் பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம் உள்ளிட்டவற்றை அறிமுகப் படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சிங்கராஜ, ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ் மலைத்தொடர் மற்றும் மகாவலி ஆகிய பகுதிகளை முக்கிய பகுதிகளாக மாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், வனப் பாதுகாப்புச் சட்டத்தை கருத்தில் கொண்டு, மீண்டும் காடுகளை உருவாக்கல், முத்துராஜவெல சதுப்பு நிலத்தை பாதுகாத்தல், சுற்றுச்சூழல் அழகை பாதுகாத்தல் போன்றவற்றுக்கு புதிய சட்டம் கொண்டு வரவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே, எதிர்வரும் ஆண்டில் முன்வைக்கப்பட வேண்டிய ஏராளமான சட்டங்களின் வரைவு தயாரிக்கப்பட வேண்டும்.

மேலும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க உலகளாவிய பணிகளில் தனித்துவமான பங்கை வகிக்க இலங்கை எதிர்பார்க்கிறது. அதற்காக காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க நாம் முன்மொழிந்துள்ளோம். காலநிலை மாற்றம் தொடர்பான அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்களை பயிற்றுவித்தல் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகளையும் இப்பல்கலைக்கழகம் வழங்கும்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து முன்னோக்கிச் செல்வதே எமது ஆலோசனையாகும். நம்மைப் போன்ற பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினை வளப்பற்றாக்குறையாகும். அந்த வளங்களை நாம் எவ்வாறு பெறுவது? இதற்கு பல்வேறு நிதி திட்டங்கள் மற்றும் கருவிகள் உள்ளன.

இந்தத் திட்டங்களின் பலனைப் பெற நாம் முயற்சிக்க வேண்டும். நாம் எவ்வாறு நன்மைகளைப் பெறலாம் மற்றும் திட்டங்களுக்கு எவ்வாறு விண்ணப்பிக்கலாம் என்பதை ஒரு நாடாக இலங்கை நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை இலங்கையால் மட்டும் மாற்ற முடியாது என்பதுதான் பிரச்சினை.

நம்மால் மாத்திரம் தனியாக முடியாது. ஏனைய நாடுகளும் இதில் இணைய வேண்டும். இதற்கெல்லாம் போதிய நிதி உள்ளதா என்பதுதான் கேள்வி. குறிப்பாக, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் தேவையான நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

உண்மையான பாதிப்புகள் நாம் செய்தவையல்ல. மேற்கு நாடுகள் மற்றும் அவ்வாறு அபிவிருத்தி செய்ய முடிவெடுத்த ஏனைய நாடுகளும் தான் உண்மையான அழிவைச் செய்தன. எனவே, அபிவருத்தி அடைந்த நாடுகள், தொழில்மயமாக்கல் செயல்முறை, பல போர்கள் மூலம் பல்வேறு யுத்தங்களால், குறிப்பாக இரண்டு உலகப் போர்கள் மற்றும் வியட்நாம் போர் மூலம் காலநிலை பாதிப்பிற்கு பங்களித்தன.

இப்போது அதன் விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியேற்பட்டுள்ளது. எனவே காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பைத் தணிக்க நிதி தேவை என்று கூறுகிறோம். நம்மிடம் உள்ளதைத் தவிர, எங்களால் திரட்ட முடிந்ததைத் தவிர அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து நிதியைப் பெற வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க எல்லா நிதியையும் எம்மால் செலவழிக்க முடியாது. நாம் கல்விக்கு பணம் செலவழிக்க வேண்டும். மேலும், சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்திலும் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு போதுமான பணம் எங்களிடம் இல்லை. உலகின் சில முன்னேறிய நாடுகள் தங்களிடமும் போதுமான பணம் இல்லை என்று கூறுகின்றன. என்னைப் பொறுத்தவரை, இது ஒரு பதில் அல்ல. அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இழப்பு மற்றும் சேதக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பணம் இல்லை என்றால், இந்த முடிவுகளை செயல்படுத்த முடியாத நிலை எற்படும்.

உதாரணமாக, ரஷ்ய-உக்ரைன் போருக்கு செலவழிக்கும் பணத்தை நாம் கருத்தில் கொண்டால், ரஷ்யா ஒரு பக்கம் அதிக நிதியை செலவழிப்பதோடு, மேற்குலகம் மறுபுறம் நிறைய பணத்தை செலவழிக்கிறது. அமெரிக்கா மட்டும் உக்ரைனுக்கு 100 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

மேலும், இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பதட்டமான சூழ்நிலை உருவாகி வருகிறது. சம்பந்தப்பட்ட நாடுகள் அதிக அளவில் விமானங்கள் மற்றும் போக்குவரத்துக் கப்பல்களைப் பயன்படுத்தி தங்கள் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றன. அடுத்த சில ஆண்டுகளில் மாத்திரம் 100 பில்லியன் டொலர்களுக்கு மேல் இதற்காக செலவிடப்படவுள்ளது.

அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இதற்காக அதிக பணத்தை செலவழிக்கின்றன. இந்த நாடுகளிடம் பணம் இருப்பதால் தான் ஆயுதங்கள் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக இவ்வளவு நிதியை செலவு செய்கின்றன.

அடுத்த விடயம், பல்வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கடன் சுமையில் உள்ளன. இந்த நிலையில் இருந்து மீள நடவடிக்கை எடுத்த முதல் நாடு இலங்கை ஆகும். ஆனால் அது மட்டும் போதாது. கடன் சுமையில் இருக்கும் பல நாடுகளில் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதற்கான வளங்கள் இல்லை.

இது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது. ஒருபுறம், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த நிதியை செலவிடல் மற்றும் அந்த நிதியை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை. இன்னொரு பக்கம் இந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடன் சுமை. இந்த இரண்டு பிரச்சினைகளும் ஒன்றாக இணைக்கப்பட்ட இரண்டு பிரச்சினைகள் ஆகும். எனவே நாம் இது தொடர்பாகக் குரல் எழுப்புவதோடு கலந்துரையாடுவதும் அவசியம். அடுத்த காலநிலை மாநாட்டில் இந்தப் பிரச்சினையை இலங்கை நிச்சயமாக எழுப்பும் எதிர்பார்க்கின்றது. காலநிலை மாற்றதால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு தேவையான வளங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் இலங்கை முன்னணியில் இருப்பதை நான் உறுதி செய்கிறேன்.
- என்றார்.



# இலங்கை வரலாற்றை ஆய்வு செய்ய விரைவில் புதிய நிறுவனம் ஸ்தாபிப்பு

## ஜனாதிபதி ரணில் திட்டம்

இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்காக புதிய நிறுவனம் ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அருங்காட்சியகம், ஆவணக்காப்பகத்திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், கலாசார முக்கோணம், பல்கலைக்கழகங்கள் மற்றும் றோயல் ஆசிய சங்கம் என்பனவற்றை இணைத்துநிறுவி, அதற்கான சட்ட வரைவை நிறைவு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற றோயல் ஆசிய சங்கத்தின் 178 ஆவது கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாம் பதிவு செய்துள்ள வரலாறு இந்தியாவிற்கு இல்லை. நமது மகாவம்சத்தைப் போலவே, அரசியல் விமர்சகர்களும் எழுதப் படாத வரலாற்றை ஆராய்ந்தே இந்திய வரலாற்றை விளக்குகிறார்கள். இருப்பினும், வரலாற்றுக்கு ஒரு பாரம்பரியம் உள்ளது. அந்த வரலாற்றை நாம் தொடர வேண்டும்.

இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. மேலும், அந்த வரலாற்றைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வரலாற்றை ஆராய்வதன் மூலம் வருங்கால வரலாற்றைப் பாதுகாக்கும் றோயல் ஆசிய சங்கத்தின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டிய பணியாகும். றோயல் ஆசிய சங்கத்தின் சில சஞ்சிகைகளின் மூலப் பிரதிகளைப் படித்திருக்கிறேன்.

நான் முதலில் செய்ய விரும்புவது வரலாற்றுக்கான ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்குவதுதான். எனது பதவிக்காலம் முடிவதற்குள் இது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டும். அதற்காக பல்கலைக்கழகங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாட வேண்டிய இறுதி வரைவை நாங்கள் தயாரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இந்தத் துறையின் பணிகளுக்கு நிதி மற்றும் அரசாங்க ஆதரவை நாங்கள் வரலாற்று நிறுவனம் மூலம் வழங்குவோம் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஹற்றனில் மாணிக்கக்கற்களை தோண்ட முயன்ற 6 பேர் கைது!

ஹற்றன் ஊடாக மகாவலி ஆற்றுக்கு நீரேந்தும் ஹற்றன் ஓயாவை அண்மித்த காட்டுப் பகுதியில் அனுமதியின்றி சட்ட விரோதமாக நிலத்தை தோண்டி மாணிக்கக்கற்களை எடுக்க முயன்று சுற்றாடலை மாசுபடுத்திய குற்றத்தினால் சந்தேகத்தின் பேரில் 6 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதானவர்கள் அதே தோட்டத்தில் வசிப்பவர்கள் எனவும், அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம்:

# சட்டத்தரணிகள் சங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு 10 பக்க அறிக்கை சமர்ப்பிப்பு!

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் சரத்துக்கள் நாட்டின் அரசமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அமைந்திருப்பதாகத் தமது இறுதி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு, எனவே இச்சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு நீதியமைச்சிடம் வலியுறுத்துமாறு சட்டத்தரணிகள் சங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறுபட்ட எதிர்க்கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இந்தச்சட்டமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பெர்னாண்டோ தலைமையில் எண்மரடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

கடும் எதிர்ப்பை அடுத்து அவசியமான திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் பின்னணியில், மேற்படி விசேட குழு 10 பக்கங்கள் அடங்கிய அதன் இறுதி அறிக்கையை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌஸ்ய நவரத்னவிடம் கையளித்துள்ளது.

இக்குழுவானது குறிப்பாக 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச்சட்டம், தண்டனைச்சட்டக்கோவை, 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச்சட்டக்கோவை, 2015 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க குற்றங்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான சட்டம், இலங்கையின் அரசமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் தமது ஆராய்வை மேற்கொண்டிருக்கின்றது.

அதன்படி அரசமைப்பின் ஊடாக நாட்டுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் அரசமைப்பின் அடிப்படைகளையும் உத்தரவாதங்களையும் பாதுகாத்தல் என்பவற்றை இலக்காகக்கொண்டு அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் உரியவாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று மேற்படி குழு பரிந்துரைத்துள்ளது.

முதலாவதாக எத்தகைய செயற்பாடுகள் பயங்கரவாதக்குற்றத்தில் உள்ளடங்கும் என்ற விடயம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் 3 ஆம் சரத்தின் ஊடாகத் தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்படாமை முக்கிய குறைபாடாகும் என்று சுட்டிக்காட்டியுள்ள அக்குழு, எனவே இது மக்களின் உரிமைகளுக்கு அப்பால் 'பயங்கரவாதம்' என்ற பதம் விரிவாக வரைவிலக்கணப்படுத்தப்படக்கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருப்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளது. ஆகவே தவறான முறையில் பிரயோகிக்கமுடியாதவாறும், நபர்களை நியாயமற்றவகையில் கைது செய்யமுடியாதவாறும் 'பயங்கரவாதம்' என்ற பதத்தை மிகச்சரியாக வரையறுப்பது இன்றியமையாததாகும் என்று அக்குழு பரிந்துரைத்துள்ளது.

அடுத்ததாக பயங்கரவாதக்குற்றத்துக்குத் தண்டனையாக மேல்நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கமுடியுமென 4 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் குழு, இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்பட்டாலும்கூட அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே 4 ஆம் சரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் நடைமுறைப்படுத்தப்படாது என்பதால், அதனைத் திருத்தியமைக்கவேண்டும் என்று மேற்படி குழு வலியுறுத்தியுள்ளது.

மேலும் 10, 11, 13, 14, 15, 16, 30, 31, 36, 82, 83, 84, 85, 86 ஆகிய சரத்துக்களும் 28(2)(ஏ), 28(2)(பி) ஆகிய பிரிவுகளும் திருத்தியமைக்கப்படவேண்டும் என அக்குழு பரிந்துரைத்துள்ளது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் சரத்துக்கள் இலங்கையின் அரசமைப்பின் 3 ஆம் பிரிவின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அமைந்திருக்கின்றன எனவும், எனவே ஏற்கனவே கூறப்பட்டவாறு அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளும்படி நீதியமைச்சுக்கு அறிவிக்குமாறு சட்டத்தரணிகள் சங்கத்துக்குப் பரிந்துரைப்பதாகவும் அவ்விசேட குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகவிலைக்கு முட்டைகளை விற்பனை செய்தமை 29 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக அபராதம்!

அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 29 வர்த்தக நிலையங்களுக்கு 41 இலட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வத்தளை, அத்தனகல்ல, நீர்கொழும்பு, மினுவங்கொடை, கம்பஹா மற்றும் மஹர நீதிமன்றங்களால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு முட்டைகளைவிற்பனைசெய்த இரண்டு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து வலஸ்முல்ல நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மற்றுமொரு வர்த்தக நிலையத்துக்கு மாத்தறை நீதிமன்றத்தால் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளதுடன், ஹற்றன் நீதிவான் நீதிமன்றத் தால் அறுவருக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதான, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அண்மையில் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது. அதன்படி வெள்ளை நிற முட்டைகள் 44 ரூபாவுக்கும், சிவப்பு நிற முட்டைகள் 46 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும்.

இருப்பினும் கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கட்சிகள் கிடைத்திருக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் (அன்டி ரெரரிசம் அக்ட் –ATA) தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டத் தொடர் மே 9 தொடங்கும்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். இந்த வாய்ப்பை அரசியல் கட்சிகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். குறிப்பாக எதிர்க் கட்சிகளின் பொதுக் கூட்டு இது தொடர்பில் தெளிவான சரியான நிலைப்பாட்டை எடுத்து இந்தச் சட்டத்தை இல்லாமலாக்குவதற்கும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (பிரிவென்சன் ஒவ் ரெரரிசம் அக்ட் –PTA) இல்லாமலாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நடைமுறையில்உள்ளபயங்கரவாதத்தடைச்சட்டம்மிகவும் பாரதூரமானது, முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதாலேயே அதனை மாற்றுவதற்கு நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசின் காலத்தில் கொள்கையளவில் முடிவெடுக்கப்பட்டது என்று தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நீதி அமைச்சரே தெரிவித்திருக்கிறார். அப்படி நீக்கப்படவேண்டிய ஒரு சட்டத்திற்குப் பதிலாக அதைவிட மிக மோசமான ஒரு சட்டத்தை இந்த ஆட்சி நடைமுறைப்படுத்த முயன்றதே அதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்புவதற்குக் காரணம்.

தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகள் 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதாகவும், அதனுடன் சட்டத்துறைசார் வல்லுநர்களின் உதவியும் ஆலோசனையும் பெறப்பட்டே தற்போதைய சட்டமூலம் தயாரிக்கப்பட்டதாகவும் அந்தத் தொலைக்காட்சிவட்டமேசைவிவாதத்தில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது அமைச்சரர் கூறியிருந்தார்.

அப்படியானால், நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு அப்போதே கடும் எதிர்ப்பு, அதிலும் குறிப்பாக தமிழ்த் தரப்புக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டது என்பதையும் அவர் கவனத்தில் கொண்டிருக்கவேண்டும். அந்த எதிர்ப்பைத் தொடர்ந்தே அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதிலிருந்து ஆட்சியாளர்கள் அப்போது பின்வாங்கினார்கள் என்பதையும் அமைச்சர் கவனத்தில் கொண்டிருக்கவேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. பதிலாக இன்னும் மோசமான ஒரு சட்டத்திற்கான வரைவே முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட ஒரு சட்டமூலத்திலிருந்து மீண்டும் அனைத்துத் தரப்புக்களாலும் நிராகரிக்கப்பட்டஒருசட்டமூலமேதயாரிக்கப்பட்டிருக்கின்றது. எனவே அது முற்றிலுமாக இல்லாதொழிக்கப்படவேண்டும். அதுவே நியாயமானது. அதேநேரம், ஏற்கனவே இருக்கும் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை ஆட்சீயாளர்களேகொள்கையளவில்ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அதுவும் முற்றிலுமாக ஒழிக்கப்படவேண்டும்.

இந்த நிலைப்பாட்டை எதிர்க் கட்சிகள் ஒரே குரலில் ஆட்சியாளர்களுக்கு அழுத்திச் சொல்லவேண்டிய கடப்பாடு உண்டு. எதிர்க் கட்சிகள் வரிசையில் உள்ள விமல் வீரசன்ஸ, உதய கம்பன்பில போன்றவர்களும் மற்றும் சிலரும் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியது என்பதால் இந்தச் சட்டம் பகுதியளவில் நடைமுறையில் இருப்பதை விரும்புபவர்களாக இருக்கிறார்கள், என்கிற நிலையில் எதிர்த் தரப்பிலிருக்கும் அனைவரையும் இந்தச் சட்டங்களை முற்றிலுமாக நிராகரிக்க வைப்பதற்கு வசியம் செய்யவேண்டிய கடமை எதிர்க் கட்சித் தலைவரும் தற்போது ஒருங்கிணைந்த எதிரணிக்குத் தலைமை தாங்குபவருமான சஜித் பிரேமதாசவுக்கு இருக்கின்றது.

கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி பயங்கரவாதம் தொடர்பானதனிச்சட்டங்களைஅகற்றி, பதிலாகஏற்கனவே இருக்கும் தண்டனைச் சட்டங்களைப் பலப்படுத்தி நிலமைகளைக் கையாள்வதற்கான சூழலை எதிர்க் கட்சிகள், நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் எடுக்கவேண்டும்.

# 52 அரச நிறுவனங்களின் தலைவர்களையும் தகுதி அடிப்படையில் நியமிக்கவேண்டும்

## சம்பிக்க வலியுறுத்து



சர்வதேச நாணய நிதியத்தின் வரி கொள்கை மறுசீரமைப்பு நிபந்தனையை விரைவாகசெயற்படுத்தியஅரசாங்கம் நிர்வாகக்கட்டமைப்பில்ஏற்படுத்த வேண்டியமாற்றங்கள்தொடர்பான நிபந்தனை கள் தொடர்பில் அரசாங்கம்அவதானம் செலுத்தவில்லை.

52 அரச நிறுவனங்களின் தலைவர், பணிப்பாளர்கள் அரசியல் தலையீடு இல்லாமல் தகுதி, துறைசார் திறமையுடன் நியமிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை இதுவரை செயற்படுத்தப்படவில்லைஎனநாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

43 ஆவது படையணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட வசதியை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மாத்திரம் சட்ட அந்தஸ்து கிடைத்து விடாது.நிபந்தனைகளின் ஒருசிலவற்றை செயற்படுத்த இராச்சியங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை சட்டமாக்குவது தொடர்பில் 'இராச்சியங்கள் தொடர்பான சட்டத்தின்'157 ஆவது உறுப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாணய நிதியத்தின் தீர்மானங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் ஒரு சில சட்டங்கள் இயற்றப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நீடிக்கப்பட்ட முழுமையான நிதிவசதியைபெற்றுக்கொள்ள வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியம் பிரதானவையாக முன்வைத்துள்ள மத்திய வங்கி சுயாதீனப்படுத்தல் சட்டம்,ஊழல் ஒழிப்பு சட்டம் ஆகியன இயற்றப்பட வேண்டும்.நாடு என்ற ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளோம் என்பதை அரசியல் தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றவுடன் ராஜபக்ஷர்கள் புனிதர்களாக்கப்பட்டுள்ளார்கள். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி சர்வதேசத்திடம் கையேந்தும் நிலையை ராஜபக்ஷர்கள் தோற்றுவித்தார்கள் என்பதை மக்கள் மறக்க கூடாது. 2019 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி 89 பில்லியன் டொலராககாணப்பட்டது. 2020ஆம் ஆண்டு 85 டொலராகவும், 2022 ஆம் ஆண்டு 75 பில்லியன் டொலராகவும் குறைவடைந்தது.

குறுகிய காலத்தில் பொருளாதர பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் ஒருசில நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நிபந்தனைகளை செயற்படுத்தினால் நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் இரத்து செய்யப்படும் எனக் குறிப்பிடப்படுவது அடிப்படையற்றது.

நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை எட்டு மடங்காக அதிகரிக்குமாறு நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. சமூர்த்தி உள்ளிட்ட நலன்புரி திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

வரி கொள்கை மறுசீரமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அரசாங்கம் விரைவாக செயற் படுத்தியுள்ளது. அரச நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட மூன்று பிரதான நிபந்தனைகளை அரசாங்கம் இதுவரை செயற்படுத்தவில்லை.

இலங்கை மின்சார சபை,பெற்றோலிய கூட்டுத்தாபனம்,அரச வங்கிகள் உட்பட தெரிவு செய்யப்பட்ட 52 அரச நிறுவனங்களுக்கான தலைவர்,பணிப்பாளர் ஆகியோர் அரசியல் தலையீடுகள் இல்லாமல் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 52 அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நியமணம் அரசியல் நோக்கத்தை அடிப்படையாக இன்றும் இடம்பெறுகிறது.இந்த நிறுவனங்களுக்கான உயர் பதவி நியமணங்கள் அரசமைப்பு பேரவை ஊடாக இடம்பெற வேண்டும்என்பதைஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இரண்டாவதாக 52 அரச நிறுவனங்களின் கணக்காளர் நாயகத்தின் மதிப்பீட்டு அறிக்கை கடந்த மார்ச் மாதம்31ஆம்திகதிக்குமுன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவில்லை.

மூன்றாவது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களின் விடயதானம்எதிர்வரும்ஜூலை மாதத்துக்கு முன்னர் திருத்தியமைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் சிறந்த நிபந்தனைகளை அரசாங்கம் முறையாக செயற்படுத்த வேண்டும். – என்றார்.

# சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மே தின நிகழ்வு

'அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம்; மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்' எனும் தொனிப்பொருளில் சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டிலான மே தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் எதிர்வரும் மே முதலாம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மே தின செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ் மக்கள் ஏற்கனவே போரின் நெருக்கடியையும், போர்க்காலப் பொருளாதார நெருக்கடியையும் மிக நீண்ட காலமாக சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

அந்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு முன் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியோடு தொடர்ந்து வரும் இன ஒடுக்குமுறையும் மேலும் பெரிய நெருக்கடிச் சுமையை உருவாக்கியுள்ளது. இவற்றுக்கு மத்தியில், புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

நாட்டில் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும்முன்னேற்றத்தையும்உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடத்தப்படுகிறது.

சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டு மக் கள் சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீள வேண்டும். இனியும் சம்பிரதாய அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது. சம்பிரதாய மேதினநிகழ்வை நடத்துவதில் அர்த்தமில்லை.

இன்று பிற நாடுகளிலும், சர்வதேச வங்கிகளிலும் அடமானம் வைக்கப்பட்டுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்க முடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும் என அக் குறிப்பில் காணப்படுகிறது.

அத்துடன், குறித்த நாளில் இடம்பெறவுள்ள மே தின நிகழ்வில் பொது மக்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# காய்ச்சல் பீடிக்கப்பட்டிருந்தால் உடன் மருத்துவரை நாடுங்கள்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவிப்பு

நாட்டில்தற்போது நிலவும் மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 29 ஆயிரம் வரையிலானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 15 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

'மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 14 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இது டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 49 சத வீதமாகும். இதில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவானடெங்குநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இது தவிர, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில்அதிகடெங்குநோயாளர்கள் பதிவாகி வருகின்றனர். – என்றார்.

எவரேனும் ஒருவர் காய்ச்சல் பீடிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக மருத்துவரை நாடுமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

தற்போது நிலவும் மழை நிலைமையைக் கருத்தில் கொண்டு தங்கள் குடியிருப்பு பகுதிகள், பாடசாலைகள், வேலைத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் டெங்கு நுளம்பு ஏற்படாதவாறு சுத்தம் செய்யுமாறும் வெணியிடங்கள் மற்றும் தொழிற்சாலைகளை சுத்தம் செய்யுமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# நாட்டில் பல்வேறு குற்றச்செயல்களோடு தொடர்பான குடுஅஞ்சு பிரான்ஸில் கைது!

இலங்கையில் பல குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்படும் குடுஅஞ்சு என்பவரை பிரான்ஸ்பொலிஸார்கைதுசெய்துள்ளனர். குடும்ப வன்முறை குற்றச்சாட்டின் பின்னரே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸில் வசித்துவந்த அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸ் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரைபிரான்ஸிலிருந்து இலங்கைக்குஅழைத்துவருவது தொடர்பாக இலங்கை பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

குடு அஞ்சு கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தையான தெகிவளை மவுண்டலவேனியாமாநகரசபை உறுப்பினர் ரஞ்சன் டி சில்வா படுகொலை உட்பட பல சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டுவருகின்றார்.

